# இளவேனில்



கேசி தமிழ் மன்றம்

இதழ் 30 - ஆடி 2026

Ilavenil - Casey Tamil Manram Inc - ISSN 2200-789X

# Looking to **buy, invest or refinance** your home loan? I can help!

Can

## Helping you secure the right loan with confidence.

**Budget guidance**
Understand your options and how much you can afford.

**Personalised repayment plan**
Achieve your goals with a personalised repayment plan.

**Free customised property reports**
Better understand the market and any target property or suburb.

**Flexibility to suit your changing needs**
Track and change your loan and repayments to suit your lifestyle.

**Simpler Refinancing**
Save time and hassle with less paperwork when you refinance. We've made refinancing easier by reducing our verification and validation process for eligible customers.[1]

**Information about CommBank Yello, our customer recognition program**
Eligible home loan customers can access bright and shiny benefits like cashbacks, discounts and prize draws.[2]



Raja Naga
Mobile Home Lending Executive
0448 818 645
Raja.Naga@cba.com.au
I also speak Hindi, Tamil & Telugu

**Book an appointment at a time & place that suits you.**

**Things you should know:**
Applications are subject to credit approval. Eligibility criteria and other conditions may apply to some loans. Full terms and conditions will be included in our loan offer. Fees and charges may be payable. Property information is obtained from third parties and is not intended to be advice or a professional property appraisal and should not be relied upon as such. You should consider seeking your own enquiries and assessments before making any decisions.
1 To be eligible for simpler refinancing you must be refinancing a home loan held for at least 6 months with CFI (including internal refinance) and have an LVR of less than or equal to 80% with no LMI or LDP. Comprehensive Credit Reporting (CCR) conduct on the home loan being refinanced must not have any late payments for at least the last 6 months. The home being refinanced must have no reliance on security or servicing guarantor(s) or require alternate servicing. The customer must be borrowing in the same name(s) as the CFI home loan being refinanced and it must be a personal loan (no company or trust borrowers) with no more than two borrowers. Simpler refinancing is not available for construction loans (unless fully drawn when repaying the OFI loan) or bridging loans.
2 Ongoing eligibility conditions apply. See commbank.com.au/commbankyello for more information and the full terms and conditions.
Commonwealth Bank of Australia ABN 48 123 123 124 AFSL and Australian credit licence 234945.

ADV15409 101225

# பொருளடக்கம்

உண்மை எப்போதும் நிலைக்கும்........ 2
SUKHRAJ'S FABULOUS HAIR........ 4
சுக்ராஜின் அழகான முடி........ 6
ஆசிரியர் தலையங்கம்........ 9
Google பாட்டி........ 12
நித்தா........ 15
Parenting Across Generations........ 18
சிலம்பில் சிதறுண்ட மணிகள்........ 20
பெண்Money........ 24
பாரதியாரின் பன்முகங்களில் பெண் விடுதலை........ 30
எதற்காக........ 33
Census 2026........ 34
மக்கள் தொகை கணக்கெடுப்பு 2026........ 35
வரையறைகளை தாண்டி........ 37
Readers review........ 40
முதுமையை அரவணைப்போம்........ 41
நிழல்களின் இரவு - ஸம்ராவின் படைப்புகள்........ 43
217 km........ 47



# உண்மை எப்போதும் நிலைக்கும்

பள்ளிக்கூடத்தில் கூடைப்பந்துப் பயிற்சி நடந்துகொண்டிருந்தது. எல்லாரும் பயிற்சி செய்துகொண்டிருந்தபோது என் இரண்டு நண்பர்கள் மடிக்கணனியில் ஏதோ விளையாடிக்கொண்டிருந்தார்கள். எனக்கு அது என்ன என்று அறிய ஆர்வமாக இருந்தது.

“நீங்கள் என்ன கணினி விளையாட்டு விளையாடுகிறீர்கள்” என்று நான் அவர்களிடம் கேட்டேன். ”நாங்கள் இராணுவ விளையாட்டு விளையாடுகின்றோம்” என்று சொன்னார்கள். ”இந்த விளையாட்டு எப்படி விளையாடுவது” என்று நான் கேட்க ” இது ஒரு கணினி விளையாட்டு இதில் நீங்கள் எதிரி வீரர்களைச் சுட வேண்டும். ஒவ்வொருவரையும் மூன்று தரம் சுட்டு விழுத்த வேண்டும். அதையும் ஒரு கொஞ்ச நேரத்திற்குள் விழுத்தினால்தான் வெற்றி” என்று என் நண்பர்கள் விளங்கப்படுத்தினார்கள். இதைக் கேட்டதும், இதில் உள்ள துப்பாக்கிகளையும் கத்திகளையும் பார்த்ததும் எனக்கும் இந்த விளையாட்டை வாங்க வேண்டும் என்று ஆசை வந்தது.



நிஷ்கலன்
விஜயகுமாரன்

நான் வீட்டுக்குப் போய் ”முப்பது வெள்ளிகள் தர முடியுமா” என்று அம்மாவிடம் கேட்டேன். ”முப்பது வெள்ளிகள் ஏன் வேண்டும்” என்று அம்மா கேட்டார். கணினி விளையாடினால் நான் அதையே திருப்பி திருப்பி விளையாடி படிப்பில் கவனம் செலுத்த மாட்டேன் என்றதால் அம்மா என்னை கணினி விளையாட்டு வாங்க விடமாட்டா என்று எனக்கு ஏற்கெனவே தெரியும். அதனால் நான் பதட்டப்பட்டு அது புத்தகம் வாங்குவதற்காக என்று அம்மாவிடம் பொய் சொன்னேன். அம்மாவும் என்னை நம்பி “என் கைப்பையில் பணம் இருக்கிறது. அதை எடு” என்று கூறினார். அம்மா என்னை நம்பிப் பணம் தந்தது எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. ஆனாலும் பணத்தை எடுத்துக் கொண்டு நண்பர்களுடன்

கடைக்குச் சென்றேன். போகும்போது பொய் சொன்னதை நினைத்துக் கொஞ்சம் வயிற்றுக்குள் ஏதோ செய்தது.

கடைக்குள் போனதும், அந்தக் கடை மிகப் பெரியதாக இருந்தது. கடை நிறைய கணனி விளையாட்டுக்கள் இருந்தன. உயிரோட்டமாகவும் நிறமயமாகவும் இருந்தது. எனக்குப் பிடித்த எல்லா விதமான விளையாட்டுகளும் இருந்தன. நான் ஆசைப்பட்ட, என் நண்பர்கள் விளையாடிய விளையாட்டை அந்த கடை முழுவதும் தேடினேன் . அப்போது கடைக்குள் என் அம்மா வந்தார். நான் பயத்தில் ஓடிப்போய் ரகசியமாக மறைந்தேன். அவர் எடுத்து வைத்த ஒவ்வொரு அடியிலும் என் இதயம் வேகமாக துடிக்க ஆரம்பித்தது. கொஞ்ச நேரத்தில் அம்மா எதையோ வாங்கிக்கொண்டு போய்விட்டா.

நான் இறுதியாக தேடிவந்த விளையாட்டைக் கண்டேன். நான் சீக்கிரமாக அந்த விளையாட்டை வாங்கிக் கொண்டு ஓடினேன். நான் வீட்டுக்குத் திரும்பி வந்த உடனே அதை என் அறையில் ஒழித்து வைத்தேன். இதை என் அம்மாவிடம் காட்டினால் அதை எடுத்துவிடுவார் என்று எனக்குத் தெரியும்.

ஆனால் இதைச் செய்ததால் எனக்குக் குற்ற உணர்வு ஏற்பட்டது. என் வயிற்றில் பட்டாம்பூச்சிகள் பறப்பது போல் உணர்ந்தேன். இருந்தாலும் நான் அந்த விளையாட்டை விடவில்லை.ஆனால் என்னுடைய அம்மாவின் சொல்லிற்கு எதிராக நடக்கிறேன் என்று எண்ணும் பொழுது பயமாகவும் பதட்டமாகவும் சோகமாகவும் இருந்தது. விளையாட்டை எவ்வளவு ஆசையாக வாங்கினாலும் அதை மகிழ்ச்சியாக விளையாட முடியவில்லை.

அதிலிருந்து படிப்பில் நான் கவனம் செலுத்தவில்லை. புள்ளிகள் குறைந்து விட்டது. ஆசிரியர் அம்மாவை அழைத்து வரும்படி சொன்னார்.

எனவே மிகுந்த பயத்துடனும் வேறு வழியில்லாமலும் என்னுடைய அம்மாவிடம் உண்மையைக் கூற வேண்டும் என்று முடிவு செய்தேன். சோகத்துடன் அவரிடம் முழு உண்மையையும் கூறினேன்.

அப்போது அம்மாவின் கண்களில் உள்ள ஏமாற்றத்தைக் கண்டு மிகவும் கவலைப்பட்டேன். நான் இப்போதாவது உண்மையைச் சொன்னேன் என்று அம்மா என்னை மன்னித்துவிட்டார். ஆனாலும் படிப்பைக் கவனிக்க வேண்டும் என்று சொன்னார். மீண்டும் நல்ல புள்ளிகள் எடுத்த பிறகு கொஞ்சமாக விளையாடலாம் என்று சொன்னர். இனி ஒருநாளும் நான் இந்த தவறைச் செய்ய மாட்டேன் என்றும் இனிப் பொய் கூற மாட்டேன் என்றும் அம்மாவிடம் நிச்சயமாகக் கூறினேன்.

சொன்னபடி நான் கவனமாகப் படித்தேன். அடுத்தமுறை நல்ல புள்ளிகள் எடுத்து அம்மாவைச் சந்தோஷப்படுத்தினேன்.

அம்மாவும் சந்தோஷமாக நான் வாங்கிய விளையாட்டைத் திருப்பித் தந்ததோடு அம்மா வாங்கிய ஒரு விளையாட்டையும் அளவாக விளையாட வேண்டும் என்று சொல்லி என் பிறந்தநாள் பரிசாகத் தந்தார்.

இனி நான் ஒருநாளுமே பொய் சொல்ல மாட்டேன் என்று முடிவுசெய்தேன்.




# SUKHRAJ'S FABULOUS HAIR

It was a very busy morning at kindergarten. Amy was eating her snack with Sashain. Ali was painting. Kai was building a lego car.

Godha, the kindergarten teacher, was reading a book with Caleb, when she noticed Sukhraj coming towards her, crying and looking upset.

“What's wrong Sukhraj?” asked Godha.

Sukhraj stood next to Godha and continued crying.

“Sukhraj, take a deep breath and tell me what happened,” said Godha wiping Sukhraj's tears.

“Shawn said that I am a girl. I am not a girl!”



*Paru Ramesh*

Tears started rolling down Sukhraj's eyes again.

“You are not a girl, Sukhraj!” said Godha.

“Shawn said my hair is long like a girl and I look like a girl!” he added.

“Sukhraj, my son has long hair just like you. Your hair is so beautiful!” said Godha.

Sukhraj looked unsure.

“It's true!” said Godha.

She quickly went into the office and came back with her son's photo and showed it to Sukhraj. Sukhraj looked at the photo

carefully.

I know you are upset. Let's find Shawn and talk to him!" said Godha.

Shawn was in the digging patch filling the wheelbarrow with dirt.

"Hey Shawn! Can you come here please?" said Godha.

Shawn looked worried when he saw Godha and Sukhraj coming towards him.

"You are not in trouble. I just need to talk to you. Sukhraj is feeling sad because you called him a girl." said Godha.

"But he has long hair, like girls!" explained Shawn.

"Yes, he has beautiful hair, doesn't he? That's why he is wearing a "patka" so he can keep his hair nice and tidy! Look at my hair. It is very short and I am a girl!" smiled Godha.

"What's a patka?" questioned Shawn.

"This!" said Sukhraj pointing to his head.

"Patka is this cloth that Sukhraj wears to cover his hair. His hair is called juda. Sukhraj has to wear a patka outside his home and we are not allowed to touch it!"

"Why?" asked Shawn.

"Because it is very special and Sukhraj and his family show their love to their god by wearing a patka," explained Godha.

"I am a boy!" added Sukhraj loudly.

"Of course you are!" smiled Godha.

That afternoon during group story time, Godha and the children watched a You Tube video of children around the world wearing different head coverings – a hijab, taqiyah (Islam), kippah (Judaism), mantilla (Christianity), dhuku (African Christianity and Islam).

Later, Godha invited Sukhraj to join her in front of the class.

"Kinder friends, just like the children in the video we saw, Sukhraj is wearing a patka and he has beautiful long hair inside. Sukhraj, can your mum please come to kinder and show us how to tie the patka?" asked Godha.

"Yes, yes! I am a boy," replied Sukhraj excitedly.

"How many patkas do you have?" asked Godha.

"Lots and lots and lots and I have all colours! I am a boy!" beamed Sukhraj.

"Can you please ask mum to bring them?" asked Godha.

Sukhraj nodded with a biggest smile.

***THE END***

In Australia, people follow many wonderful traditions, practices and celebrations.

In kindergarten or school, let us all -

Ask questions if we don't know.

Be curious and read books to learn more.

Say kind words to our classmates and friends who are different to us.

Speak up and tell our teacher if we hear someone saying hurtful words and do something that is unkind. It is not okay to be quiet.

Enjoy Harmony Day celebrations - be proud of our culture and appreciate others too.

# சுக்ராஜின் அழகான முடி

பாரு ரமேஷ்

கின்டர் கார்டனில் மிகப் பரபரப்பான காலை நேரம்.

ஏமி தனது சிற்றுண்டியை சஷைனுடன் சாப்பிட்டுக் கொண்டிருந்தாள்.

அலி ஓவியம் வரைந்து கொண்டிருந்தான். காய், லெகோ காரை உருவாக்கிக் கொண்டிருந்தான்.

கின்டர் ஆசிரியரான கோதாவும், கேலப்பும் ஒரு புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தார்கள்.

அப்போது அழுதபடி சுக்ராஜ் அவர்கள் அருகில் வந்தான்.

“என்ன ஆயிற்று சுக்ராஜ்?” என்று கோதா கேட்டார்.

சுக்ராஜ் கோதா அருகில் நின்றபடியே தொடர்ந்து அழுதான்.

“சுக்ராஜ், ஆழமாக மூச்சை இழுத்து விடு, என்ன நடந்தது என்று சொல்லு,” என்று கோதா அவனது கண்ணீரைத் துடைத்தபடி கூறினார்.

“ஷான் என்னை பெண் என்று சொன்னான். நான் பெண் இல்லை!”

மீண்டும் சுக்ராஜ் கண்களில் இருந்து கண்ணீர் வழியத் தொடங்கியது.

“நீ பெண் இல்லை, சுக்ராஜ்,” என்று கோதா கூறினார்.

“என் முடி பெண்ணைப் போல நீளமாக இருக்கிறது என்றும், நான் பார்க்க பெண்ணைப் போல இருக்கேன் என்றும் ஷான் சொன்னான்!” என்று சுக்ராஜ் மேலும் கூறினான்.

“சுக்ராஜ், என்னுடைய மகனுக்கும் உன்னைப் போலவே நீண்ட முடி இருக்கிறது. உன் முடி மிகவும் அழகாக இருக்கிறது!” என்று கோதா கூறினார்.

சுக்ராஜ் கோதாவை நம்பாமல் பார்த்தான்.

“அது உண்மைதான்,” ஏன்று கூறி கோதா உடனே அலுவலக அறைக்குள் சென்று தனது மகனின் புகைப்படத்தைக் கொண்டு வந்து சுக்ராஜிற்கு காண்பித்தார்.

சுக்ராஜ் அதை கூர்ந்து பார்த்தான்.

“நீ வருத்தப்படறது எனக்கு புரியுது. ஷானை பார்த்து அவனிடம் பேசுவோம் வா!”

என்று கோதா சுக்ராஜை அழைத்தார். ஷான் மணல் தோண்டும் பகுதியில் மண்ணைத் தள்ளுவண்டியில் நிரப்பிக் கொண்டிருந்தான்.

“ஹாய் ஷான்! இங்கே கொஞ்சம் வர முடியுமா?” என்று கோதா அழைத்தார்.

கோதாவும் சுக்ராஜும் தன்னிடம் வருவதைக் கண்ட ஷான் கொஞ்சம் கவலையடைந்தான்.

“நீ எந்தத் தவறும் செய்யவில்லை. ஆனால் உன்னிடம் ஒரு விஷயம் பேச வேண்டும்.

நீ சுக்ராஜை பெண் என்று அழைத்ததால் அவன் வருத்தமாக இருக்கிறான்,” என்றார் கோதா.

“ஆமாம், அவனுக்கு பெண்களைப் போல நீண்ட முடி இருக்கிறதே!” என்று ஷான் விளக்கினான்.

“ஆமாம், அவனுடைய முடி மிகவும் நீளமாக இருக்கிறது இல்லையா? அதனால்தான் அவன் தனது முடியை ஒழுங்காக வைத்துக்கொள்ள ‘பட்கா’ அணிகிறான். நான் ஒரு பெண். என் முடியைப் பார். அது மிகவும் குட்டையாக இருக்கிறது.” என்று கோதா புன்னகையுடன் கூறினார்.

“பட்கா என்றால் என்ன?” என்று ஷான் கேட்டான்.

“இதுதான்!” என்று சுக்ராஜ் தனது தலையைச் சுட்டிக்காட்டினான்.

"பட்கா என்றால் முடியை மூடிக்கொள்ள அணியும் துணி."

"ஏன்?" என்று ஷான் கேட்டான்.

"ஏனென்றால் அது அவனுக்கு மிகவும் சிறப்பானது. சுக்ராஜீம் அவனது குடும்பமும் தங்களுடைய கடவுளிடம் உள்ள அன்பை வெளிப்படுத்துவதற்காக பட்கா அணிகிறார்கள். அவனுடைய முடி 'ஜூடா' என்று அழைக்கப்படுகிறது. வீட்டிற்கு வெளியே செல்லும்போது சுக்ராஜ் பட்கா அணிய வேண்டும். மேலும் அதை நாம் தொடக்கூடாது."

"நான் பையன்!" என்று சுக்ராஜ் சத்தமாகச் சொன்னான்.

"நிச்சயமாக நீ ஒரு பையன்தான்!" என்று கோதா புன்னகைத்தார்.

அன்று மதியம், கதை நேரம் வகுப்பில், கோதாவும் சிறுவர்களும் உலகின் பல பகுதிகளில் உள்ள குழந்தைகள் தலைக்கு அணியும் பல்வேறு துணிகளைப்பற்றிய ஒரு யூடியூப் காணொளியைப் பார்த்தனர் – ஹிஜாப், தகிய்யா (இஸ்லாம்), கிப்பா (யூத மதம்), மான்டில்லா (கிறிஸ்தவம்), துகு (ஆப்பிரிக்க கிறிஸ்தவம் மற்றும் இஸ்லாம்).

பின்னர், கோதா சுக்ராஜை வகுப்பின் முன் வர அழைத்தார்.

"பட்டு குட்டீஸ், நாம் காணொளியில் பார்த்த குட்டீஸ் போலவே, சுக்ராஜ் ஒரு பட்கா அணிந்திருக்கிறான். அதன் உள்ளே அவனுக்கு அழகான நீண்ட முடி இருக்கிறது. சுக்ராஜ், உன் அம்மா ஒருநாள் கிண்டருக்கு வந்து பட்காவை எப்படி கட்டுவது என்று எங்களுக்குக் காட்டச்சொல்கிறாயா?" என்று கோதா கேட்டார்.

"ஓஓஓ சரி சரி! நான் பையன்," என்று சுக்ராஜ் மகிழ்ச்சியுடன் பதிலளித்தான்.

"உன்னிடம் எத்தனை பட்காக்கள் இருக்கின்றன?" என்று கோதா கேட்டார்.

"நிறைய, நிறைய, நிறைய! எல்லா நிறங்களிலும் இருக்கின்றன! நான் பையன்!" என்று மீண்டும் சுக்ராஜ் பெருமிதத்துடன் கூறினான்.

"அவற்றை எல்லாம் உன் அம்மாவிடம் கொண்டு வரச் சொல்ல முடியுமா?" என்று கோதா கேட்டார்.

சுக்ராஜ் பெரும் மகிழ்ச்சியுடன் தலையசைத்தான்.

## முற்றும்

ஆஸ்திரேலியாவில் மக்கள் பல அற்புதமான பாரம்பரியங்கள், பழக்கவழக்கங்கள் மற்றும் கொண்டாட்டங்களைப் பின்பற்றுகிறார்கள்.

மழலையர் பள்ளியிலோ ஆரம்பப் பள்ளியிலோ நாம் அனைவரும் தெரியாத விஷயங்களைப் பற்றி கேள்விகள் கேட்டு கற்றுக்கொள்வோம்.

ஆர்வத்துடன் மேலும் அறிய, புத்தகங்களைப் படிப்போம்.

நம்மைவிட வேறுபட்ட வகுப்பு நண்பர்களிடம் அன்பான வார்த்தைகளைப் பேசுவோம்.

யாராவது புண்படுத்தும் வார்த்தைகளைப் பேசுவதையோ அல்லது மதிப்பற்ற செயல்களைச் செய்வதையோ பார்த்தால், அமைதியாக இருக்காமல் ஆசிரியரிடம் தெரிவிப்போம்.

ஹார்மனி டே (Harmony Day) கொண்டாட்டங்களில் மகிழ்ச்சியுடன் பங்கேற்போம் – நமது சொந்த கலாச்சாரத்தைப் பெருமைப்படுவோம் மற்றவர்களின் கலாச்சாரத்தையும் மதித்து பாராட்டுவோம்.

# இளவேனில்

இதழ் 30 – ஆடி 2026


@ கேசி தமிழ் மன்றம்


## ஆசிரியர் குழு
சாந்தி சிவகுமார்
பாலா
தாமரை மதியழகன்
ஜேகே
கேதா
ச. சத்தியன்
சரணியா சத்தியன்

## அட்டைப்படம்
புகைப்படம் - சரணியா சத்தியன்
வடிவமைப்பு - கேதா

## படங்கள் செயற்கை நுண்ணறிவு வடிவமைப்பு
பிரவீணா சந்திரநாயகம்

## உள் வடிவமைப்பு
சி.ஜெயானந்தன்


---


## *Ilavenil*

*Issue 30 – July 2026*


*© Casey Tamil Manram Inc*


*ISSN 2200-789X*


***Editorial Team***
*Shanthi Sivakumar*
*Bala*
*Thamarai Mathiyalagan*
*JK*
*Ketha*
*S. Saththiyan*
*Saraniyah Saththiyan*

***Cover Image***
*Photo - Saraniyah Saththiyan*
*Design - Ketha*

***Images AI Illustration***
*Braveena Santhiranayakam*

***Design and Layout***
*S Jeyananthan*


***editor@caseytamilmanram.org.au***

# ஆசிரியர் தலையங்கம்

மீண்டுமொரு இளவேனிலில் உங்கள் அனைவரையும் சந்திப்பதில் பெரு மகிழ்ச்சியடைகின்றோம். இம்முறையும் இவ்விதழ் சிறுவர் முதல் பெரியவர்கள்வரை வாசித்து உள்வாங்கும் வகையில் பல்வேறு ஆக்கங்களைத் தாங்கி வருகிறது. இளவேனிலின் ஒவ்வொரு பக்கத்திலும் எங்களின், எம் சமுகத்தின் விம்பத்தினைப் படம் பிடித்துக் காட்டும் முனைப்புடன் நாம் தொடர்ந்து இயங்குகிறோம். இம்முயற்சிக்கு வாசகர்களும் எழுத்தாளர்களும் எமக்குத் தொடர்ச்சியாகக் கொடுக்கும் ஆதரவுக்குப் பேரன்பும் நன்றிகளும்.

இன்று அவுஸ்திரேலியாவின் ஒவ்வொரு மூலையிலும், வாரம்தோறும் தமிழ் மொழிப் பாடசாலைகள், தமிழ்ப் போட்டிகள், கலை நிகழ்ச்சிகள், சமூக ஒன்றுகூடல்கள் எனப் பல தமிழ்ச்சமூகம் சார்ந்த நிகழ்வுகள் நடத்தப்படுகின்றன. தமிழ் இளைஞர்கள் பாரம்பரிய உடைகளில் மிளிர்கின்றனர். சமூக அமைப்புகளும், ஆர்வலர்களும் தங்களது கணக்கில்லா நேரத்தினை இவற்றில் செலவிடுகின்றனர். தமிழ் எங்கள் அடையாளம் என்ற பெருமிதங்களையும் அறைகூவல்களையும் பொதுவெளிகளிலும் பல சமூக வலைத்தள பகிர்தல்களிலும் நன்றாகவே பார்க்கமுடிகிறது. தமிழ், கலாசாரம் என்றாலே நமக்குள் ஒரு உற்சாகம் பிறக்கிறது.

ஒரு புலம்பெயர் தமிழ்ச் சமூகமாக, எங்கள் ஒவ்வொருவரினது தேடலும், நம்முடையதும் நமது பிள்ளைகளுடையதும் அடையாளத்தினை உறுதிப்படுத்த வேண்டும் என்ற வேட்கையோடு ஒன்றிணைந்தது. பல தமிழ் நிகழ்ச்சிகளின் அடிப்படையும் இதுவே. எமது பிள்ளைகளை எமது தாய் நாட்டிலிருந்தும் எமது உறவுகளிடமிருந்தும் தூரத்தில் வளர்க்கும்போது இயற்கையாகவே எம்முள் ஒரு அடையாளத்திற்கான தேடல் உருவாகுகிறது. சொந்த ஊரில் பிறந்து வளரும்போது இவ்வச்சம் பெரிதும் எழுவதில்லை. ஆனால் இங்கே நாம் தொலைந்துவிடுவோமோ என்ற எச்சரிக்கை உணர்வின் உந்துதத்தில் அத்தேடல் மேலும் விரிகிறது. எமது பிள்ளைகள் தமிழில் பேச வேண்டும், எமது பண்டிகைகள் கொண்டாடப்பட வேண்டும், அவர்கள் தங்களது தமிழ் அடையாளத்தினைப் புரிந்துகொள்ள வேண்டும், அவர்களது வேருடன் ஒன்றிணைந்து இருக்கவேண்டும் போன்ற பல ஏக்கங்களின் வடிகாலே இம்முயற்சிகள்.

ஆயினும் இங்கு நாம் சற்றே நிதானித்து உற்று நோக்கினோமானால் இவற்றுக்கிடையே நாம் கவனிக்காமல் கடந்து போகும் ஒரு பக்கம் இருப்பதையும் உணரவேண்டும். எமது அடையாளத்தினை நோக்கிய தேடலில் தமிழ் கலாசாரமும் மொழியும் நமது வாழ்வியலாக அன்றி ஒரு அரங்கேற்றமாக மட்டுமே மாறிவருகிறதா? கோயில்களிலும் மேடைகளிலும் போட்டிகளிலும் மட்டும் வெளிப்படுத்த கலாசாரமும் மொழியும் கலையும் வெறும்

காட்சிப்பொருள்களா என்ன?

மொழியோ, கலையோ அதினின்று எழுந்த கலாசாரமோ ஒரு சமூகத்தின் வாழும் வழிகள். மொழி நமக்கிடையேயும் வரலாற்றுடனும் காலத்துடனும் தொடர்புகொள்ள ஒரு சாதனமாகிறது. கலை நம் கருத்தியல்களை, உணர்வுகளை வெளிப்படுத்தும் கருவியாகிறது. இவற்றிலிருந்து முகிழ்வது கலாசாரமாகும். இவை யாவும் சேர்ந்ததே நம் அடையாளம். இதனாலேயே காலந்தோறும் தமிழர்தம் அடையாளம் சூழ்நிலைகளுக்கேற்ப மருவி வந்திருக்கிறது. சங்கத்தின் மொழி இன்றைக்கு எமக்குப் புரிவது கடினம். அப்போதிருந்த கலை வடிவம் இன்றில்லை. கலாசாரமும் இல்லை. ஆனால் அது அன்றைக்கான தமிழ் அடையாளம். அவற்றுள் காலத்தின் போக்கில் வடிகட்டப்பட்டு எஞ்சியவை இன்றும் நிலைக்கிறது. இன்று எமக்கான ஒரு மொழி உண்டு. எமக்கான கலைகள் உண்டு. எண்ணங்கள், கருத்தியல்கள் உண்டு. அதன்வழி நமக்கான கலாசாரம் முகிழ்கிறது. அதுவே நம் அடையாளமுமாம். இந்தப் புரிதல் நம் சமூகத்திடம் இருப்பது அவசியம்.

இந்தப் புரிதலோடு நமது சமூகச் செயற்பாடுகளை மீண்டும் ஒருமுறை உற்று நோக்குவது பயனுள்ளதாக இருக்கும். 30 ஆண்டுகளுக்கு முன்னர் உருவாக்கப்பட்ட தமிழ் மொழிப் பாடசாலைகள், போட்டிகள், கலை நிகழ்ச்சிகள் மற்றும் சமூக நிகழ்வுகள் எமது மொழியையும் கலாசாரத்தையும் பாதுகாப்பதில் மிகப் பெரிய பங்காற்றியுள்ளன. குறிப்பாக முதல் தலைமுறைப் புலம்பெயர் தமிழர்களுக்கு, இவை தமது வேர்களுடன் இணைந்திருப்பதற்கும், அடுத்த தலைமுறைக்குத் தமது அடையாளத்தை அறிமுகப்படுத்துவதற்குமான முக்கியமான தளங்களாக அமைந்தன. ஆனால், இன்று வளரும் இரண்டாம் மற்றும் மூன்றாம் தலைமுறையினரின் அனுபவமும், சவால்களும் வேறுபட்டவை. தமிழ் என்பது அவர்களுக்கு ஒரு இரண்டாம் மொழி மட்டுமே. அவர்களது அன்றாட வாழ்க்கை, கல்வி, நண்பர்கள், தொழில்நுட்பம் மற்றும் சிந்தனைகள் அனைத்தும் பெரும்பாலும் ஆங்கிலத்தைச் சுற்றியே அமைகின்றன. எனவே, அவர்களை அணுகும் வழிகளும் அவர்களது உலகத்தோடு தொடர்புடையதாக மாற வேண்டியுள்ளது.

இன்று பல தமிழ் நிகழ்ச்சிகளிலும், போட்டிகளிலும் நாம் பெருமையாகப் பேசுவது தமிழின் தொன்மை, சங்க இலக்கியம், பழமையான வரலாறு மற்றும் பாரம்பரியங்கள் பற்றியே. இவை நிச்சயமாக நமது பெருமைக்குரியவைதான். ஆனால் ஒரு இளம் தலைமுறையினருக்கு ஒரு மொழி நெருக்கமாக மாறுவதற்கு அதன் வரலாற்றையும், பெருமையையும் மட்டும் அறிந்தால் போதுமா? அந்த மொழியில் அவர்களது கனவுகளையும், கேள்விகளையும்,

சிந்தனைகளையும் வெளிப்படுத்தும் வாய்ப்புக் கிடைக்க வேண்டாமா? செயற்கை நுண்ணறிவு, காலநிலை மாற்றம், அறிவியல், விளையாட்டு, திரைப்படம், சமூக மாற்றங்கள் போன்ற இன்றைய உலகத்தைப் பற்றித் தமிழில் பேசுவதற்கான வாய்ப்புகளை உருவாக்க வேண்டும். அப்போதுதான் தமிழ் அவர்களுக்குக் கடந்த காலத்தின் நினைவாக அல்லாமல் நிகழ்காலத்தின் ஒரு பகுதியாக மாறும்.

இதே மாற்றம் கலாசாரத்திற்கும் தேவையாகிறது. இன்று நமது பொங்கல், சித்திரைத் திருவிழா, கலை நிகழ்ச்சிகள் அனைத்தும் பெரும் வரவேற்பைப் பெறுகின்றன. பிரமாண்டமான மேடைகள், அழகான அலங்காரங்கள், சிறந்த நிகழ்ச்சிகள் என சமூகத்தின் திறமையையும் ஒற்றுமையையும் அவை வெளிப்படுத்துகின்றன. ஆனால், இந்த நிகழ்ச்சிகள் முடிந்த பின்னர், அவற்றின் பின்னுள்ள விழுமியங்கள் எவ்வளவு தூரம் எமது பிள்ளைகளின் வாழ்க்கையில் தொடர்கின்றன? ஒரு பண்டிகை என்பது ஒரு நாள் கொண்டாட்டமாக மட்டுமல்லாமல், அதன் பின்னுள்ள எண்ணங்கள், உறவுகள், இயற்கை மீதான மரியாதை, சமூக உணர்வு போன்றவற்றை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லும் ஒரு வழியாகும். ஒரு கலாசாரத்தை அவர்கள் பார்வையாளர்களாக அல்ல, தங்களது உடமையாக ஏற்றுக்கொள்ளச் செய்ய வேண்டும்.

இதற்காக நாம் கடந்த காலத்தை விட்டு விலக வேண்டியதில்லை. மாறாக, அதன் அடிப்படைகளைப் புரிந்துகொண்டு, நாம் வாழும் காலத்திற்கேற்ப அதனை வளர்த்தெடுக்க வேண்டும். ஒவ்வொரு தலைமுறையும் தமக்கான அடையாளத்தை உருவாக்குகிறது. இன்று அவுஸ்திரேலியாவில் வளரும் தமிழ்ப் பிள்ளைகளின் அடையாளமும், அவர்கள் வாழும் சூழலுடனும் அவர்களது வேர்களுடனும் இணைந்த ஒரு புதிய வடிவமாக இருக்க வேண்டும்.

எமது நோக்கம் பிள்ளைகளைக் கடந்த காலத்தின் ஒரு பிரதியாக உருவாக்குவது அல்ல. அவர்கள் தமது வேர்களை அறிந்து, தாங்கள் வாழும் உலகுடன் இணைந்து, தமிழையும் கலாசாரத்தையும் தங்களுடையதாக உணர்ந்து வாழக்கூடிய சூழலை உருவாக்குவதே. மொழியும் கலாசாரமும் மனிதர்களின் அன்றாட வாழ்வில் இயல்பாக இடம்பெறும்போதுதான் தலைமுறைகளைத் தாண்டி நிலைத்திருக்கும்.

அதனைச் செய்வோமாக.

**அன்புடன்,**

**இளவேனில் ஆசிரியர் குழு**

**editor@caseytamilmanram.org.au**



பவித்ரா
ராகவன்

# Google பாட்டி...

காலை 7:00 மணியிருக்கும்...

திடீரென நித்திரையிலிருந்து கண் விழித்த விது என்கின்ற விருதாச்சலம் கடிகாரத்தைப் பார்த்தான். ஐயோ யுனிவர்சிட்டிக்கு நேரமாகிவிட்டது என்று புலம்பியவாறு சீக்கிரமாகத் தயாராகத் தொடங்கினான். அம்மாவும் அப்பாவும் வேலைக்குச் சென்றுவிட்டார்கள் போலும். நேற்றைக்கே, “தான் அதிகாலையில் வேலைக்குச் சென்றுவிடுவேன்” என்று கூறியது, இப்போதுதான் விதுவிற்கு நினைவுக்கு வந்தது. அம்மா இருந்திருந்தால் தன்னை 6 மணிக்கு எழுப்பிவிட்டிருப்பார். அடுத்த அறையில் தங்கை விதுரா நன்கு தூங்கிக்கொண்டிருந்தாள். பாடசாலை விடுமுறை என்பதால் இப்போதைக்கு எழும்பமாட்டாள். வின்டர் சீசன் தொடங்கிவிட்டதால் எழும்புவதென்பது கொஞ்சம் கடினம்தான். அத்தோடு அசைன்மண்ட் முடித்து படுக்கவே இரவு ஒரு மணியாகிவிட்டது.

தயாராகிவிட்டு, சாப்பிடுவதற்கு ஏதேனும் இருக்கிறதா எனப் பார்த்தபோது சாப்பாட்டு மேசையில் தோசையும், சம்பலும் இருந்தது. பார்க்கவே விதுவிற்கு எரிச்சலாக இருந்தது. எல்லாம் இந்தப் பாட்டியின் வேலைதான் என்று தனக்குள் முணுமுணுத்துக்கொண்டே, தனக்குப் பிடித்த சீரியலையும் பாலையும் கோப்பைக்குள் ஊற்றிக்கொண்டிருந்தான். வரவேற்பறையிலிருந்து யாருடனோ பாட்டி கதைத்துக்கொண்டிருந்தார். அந்த உரையாடல் வீடு பூராகவும் எதிரொலித்துக்கொண்டிருந்தது.

“ஹலோ ராஜம், நான்தான் அன்றைக்கே

சொன்னேனே, விஜய்தான் அடுத்த முதலமைச்சர் என்று. இதற்குத்தான் கொஞ்சமாவது அரசியல் அறிவு வேண்டும் என்பது. ஜென் சீ பிள்ளைகளுடையதும் எங்களைப் போல ஆட்களுடைய வாக்கும் தவேகாக்குத்தான் என்று தெரிந்த விஷயம்தானே."

"அது சரி, நாளைக்கு நான் சீனியர் சிட்டிசன் கூட்டத்துக்குப் போறேன். நீயும் வருகிறாய்தானே. இந்த முறை நிறைய நிகழ்ச்சிகள் எல்லாம் இருக்கிறதா, சுப்ரமணியம் மனைவி சிவலதா சொன்னவர்."

இதற்கு மேல் பாட்டியின் கதைகளைக் கேட்டால் விதுவுக்கு கோபம் வந்துவிடும். எப்போதும் கையில் தொலைபேசியுடனேயே இருப்பவர் பாட்டி. யூடியூப்பில் பார்க்கின்ற விடயங்களைக் கேட்டு 10 பேருக்குச் சொல்ல வேண்டும். அரசியல், சினிமா, ஜோதிடம் என்று தனக்குத்தான் எல்லாம் தெரியும் என்ற நினைப்பு பாட்டிக்கு. ஊடகங்களில் சொல்கின்ற அனைத்தும் உண்மை என நம்பி ஊருக்கே கதை சொல்வார். அம்மாவும் அப்பாவும்கூட எங்கட விடயங்களில் தலையிடுவதில்லை. நாங்கள் போடுகிற உடுப்பிலிருந்து, சாப்பிடுகிற உணவு, செய்கின்ற வேலை, சீவுகின்ற தலை, நடையுடை பாவனையென்று அனைத்திலும் பாட்டியின் தலையீடு இருந்தே தீரும். அதுவும் தங்கையின் நிலைமையோ பரிதாபம். "பெண் பிள்ளை என்றால் இப்படித்தான்.." என்று தொடங்கிவிடுவார். இக்காலத்தில் யாருக்காவது விருதாச்சலம் என்று பெயர் வைப்பார்களா? தாத்தாவின் பெயரைத்தான் மூத்த ஆண் பிள்ளைக்கு வைக்க வேண்டுமாம், என்று பாட்டி சொல்ல, அப்பாவும் தட்டாமல் அப்படியே செய்துவிட்டார். அவர்களுக்கென்ன? பிரச்சனை எல்லாம் எனக்குத்தான். அவுஸ்திரேலியா நாட்டில், அதுவும் வெள்ளைக்காரனின் வாயில் சரியான உச்சரிப்பு வருவதற்குள் எனக்கு வாழ்க்கையே வெறுத்துவிடும். இதனாலேயே பாட்டி மீது எனக்குக் காரணம் புரியாத கோபம். நல்லவேளை தங்கை தப்பிவிட்டாள்.

பாட்டியின் கதைகள் தொடர்கின்றன.

"ஹாய் சுகுணா. இன்றைக்கு நான் கோயிலுக்கு வர முடியாது. என்னுடைய நண்பிக்கு 80-வது பிறந்தநாள்."

கதைத்துக்கொண்டே வரவேற்பறையிலிருந்து சாப்பாட்டு மேசைக்கு வந்தவர்,

"டேய் விருதாச்சலம், உனக்குத்தானே தானியத் தோசை சுட்டு வைத்தனான். இதென்ன, வெள்ளைக்காரன் சாப்பாட்டை சாப்பிடுகிறாய்."

"என்னப்பு, இப்படி தலையை சீவியிருக்கிறாய். ஜெல் வைச்சிருக்கிறாய் போல."

"பாட்டி சும்மாயிருங்கோ." எனக்கு நேரமாகிறது. உங்களோட சண்டை பிடிக்க நோ டைம்."

"அட, நாங்களெல்லாம் அந்தக் காலத்தில் எவ்வளவு சுறுசுறுப்பாக இருப்போம் தெரியுமா? அதுசரி, உன்னுடைய ஜிம்மில் சீனியருக்கு ஒஃப்பர்ஸ் போட்டிருக்கிறார்களா என்று பார்த்துச்சொல்லு. நானும் சுகுணாவும் ஜிம்மில் சேரலாம் என்று முடிவெடுத்திருக்கிறோம். ஃபிட்னஸ் முக்கியம் என்று யூடியூப்பில் சொல்றாங்க."

பாட்டியிடமிருந்து நகன்று அடுத்த வேலையைப் பார்த்தான் விது. பாட்டியோ விடுவதாக இல்லை.

"விருதாச்சலம், இந்த போனில் வைஃபை ஏதோ பிரச்சனையாக இருக்கிறது. கொஞ்சம் கனக்சனில் பிரச்சனையோ? இந்த, முன்னாலிருக்கிற ரோட்டைத் தாண்டிப் போனால் யூடியூப் வேலை செய்யாது. பேஸ்புக்கூட பார்க்க முடியாது."

அவசரமாக புறப்பட்டுக் கொண்டிருந்த விதுவுக்கு பாட்டியின் நச்சரிப்பு எரிச்சலைக் கொடுத்தது. கோபம் உச்சத்தைத் தொட்டது. தன்னையும் அறியாமல்,

"பாட்டி, உங்களுக்கு வேற வேலை இல்லையா? வைஃபை குறிப்பிட்ட இடத்தைத் தாண்டிப் போனா, கனெக்சன் இருக்காது. உங்கட ஃபோன் டேட்டாவும் முடிந்துவிட்டது.

அதுசரி, எப்ப பார்த்தாலும் இப்படியே வாட்ஸ்அப், பேஸ்புக், யூடியூப் என்றிருந்தால்? இதுல, எல்லாம் தெரியும் என்ற ஆட்டிட்டியூட். இந்தச் சின்ன விஷயம்கூடத் தெரியாது." என்று திட்டிவிட்டுச் சென்றுவிட்டான் விது.

நோபல் பார்க்கில் ட்ரெயின் ஏறியதிலிருந்து, விதுவின் மனம் ஒரு மாதிரி இருந்தது. கொஞ்சம்கூட யோசிக்காமல் பாட்டியைத் திட்டிவிட்டோம் என்றது. மனம் எப்படிப் புண்பட்டிருக்கும். அம்மா இரண்டு பிள்ளைகளை வைத்துக்கொண்டு வேலையைத் தொடர முடியாமல் திணறிய போது இலங்கையிலிருந்து, அனைத்தையும் விட்டுவிட்டு வந்து, கடந்த 18 வருடங்களாக எங்களுடனேயே இருக்கிறார். எங்களை வளர்ப்பதிலும் வீட்டைக் கவனிப்பதிலும் என்று, அம்மாவுக்கும் அப்பாவுக்கும் உறுதுணையாக இருக்கிறார். எல்லாவற்றிற்கும் குறை சொல்லும் எத்தனையோ பேருக்கு மத்தியில். ஆஸ்திரேலியா வாழ்க்கையை சந்தோஷமாக ஏற்றுக்கொண்டவர். புது ஃப்ரெண்ட்ஸ், கனெக்சன்ஸ் என்று தன்னைத்தானே புதுப்பித்துக்கொண்டவர். என்னையும் தங்கையையும் ஸ்கூலில் பிக்கப் செய்ததும் அவர்தான். தமிழ் சமூகத்தையும் தாண்டி என்னுடைய ஸ்கூலில் இருந்த மற்றைய சமூகத்தவர்கள்கூட நன்கு பழக்கமானவர். பிடித்தவரும் கூட. இந்த 75 வயதில் டெக்னாலஜியைக்கூட பிடித்துக்கொண்டவர். தனது வார்த்தைகளை எண்ணி தன்னைத்தானே நொந்துகொண்டான் விது. இல்லை, விருதாச்சலம்.

பலமுறை பாட்டிக்கு தொலைபேசி அழைப்பு விடுத்த போதும், மறுமுனையில் பதில் இல்லை. மாலை வீடு திரும்பியதும்,

"ஹாய் மாம், பாட்டி எங்க?"

"தெரியல விது. ரூமில் படுத்திருக்கிறார். ஃப்ரெண்டின் பர்த்டே பார்ட்டிக்கு போகலயாம். தலை வலிக்குதாம்."

பாட்டியின் ரூமுக்குள் நுழைந்த விது குற்றவுணர்வுடன் பாட்டியை நெருங்கி,

"ப்ளீஸ் அப்பலஜாய்ஸ் மீ, பாட்டி. நான் அப்படிக் கதைச்சிருக்கக்கூடாது. ஸாரி பாட்டி." அவனையே அறியாமல் விதுவின் கண் கலங்கியது.

பேரன் கூறிய எந்த விடயங்களும் பாட்டியின் காதில் விழுந்ததாகத் தோன்றவில்லை. அவரிடமிருந்து பதில் எதுவுமே வரவில்லை. விதுவின் குற்றவுணர்வு மேலும் அதிகரிக்கவே, பாட்டிக்கு அருகில் சென்று அவருக்கு முன்னால் அமர்ந்து கையைப் பிடித்தவாறு நிமிர்ந்து பார்த்தான். பார்த்தவனுக்கு அதிர்ச்சி.

பாட்டி ஹெட்செட் போட்டுக்கொண்டு கையடக்க தொலைபேசியை நோண்டிக் கொண்டிருந்தார். தான் கேட்ட மன்னிப்பு பாட்டியின் காதுகளை எட்டாத காரணம் அவனுக்கு இப்போதுதான் புரிந்தது. விதுவைப் பார்த்த பாட்டி,

"விருதாச்சலம், இந்த எக்ஸ்ட்ரா மொபைல் டேட்டாவை அட் பண்ணிட்டேன். இனி எனக்கு டேட்டா பிரச்சனை இருக்காது. இஸ் தட் ரைட்?" என்றார்.

விதுவுக்கோ தூக்கிவாரிப் போட்டது. தனக்குள்ளே சிரித்தவாறு,

"ஓ மை கிரேட் பாட்டி." என்றான்.

"அதுசரி, உங்களுடைய ஃப்ரெண்டின் பர்த்டேக்கு போகவில்லையா?"

"போக விருப்பம் விருதாச்சலம். ஆனால் அம்மாவுக்கு வேலை இருக்கு. என்னை ட்ராப் பண்ணக் கஷ்டம்."

"பாட்டி, இன்றைக்கு நான் உங்களை ட்ராப் பண்ணிவிட்டு ஜிம்முக்குப் போறேன்."

"அப்ப மறக்காமல் ஜிம் மெம்பர்சிப்பையும் கேட்டுட்டு வா" என்று சொல்லிவிட்டு புறப்படத் தயாரானார் பாட்டி.

இன்றைய நிகழ்வுகள் விருதாச்சலத்தின் எண்ணங்களிலும் மனவோட்டங்களிலும் ஏற்படுத்திய மாற்றங்களைப் பாட்டி அறிந்திருக்க வாய்ப்பில்லை. எது எப்படியாக இருந்தாலும், கூகிள் பாட்டியின் அட்டகாசங்கள் தொடர்கின்றன.



சஞ்ஜெயன்
சண்முகநாதன்

# "நித்தா"

சமரன் இன்றைக்கு எங்களை சோதிப்பதென்று முடிவெடுத்துவிட்டான். "Terrible Twos" என்பதை சரி என்று நிரூபிக்கும் வரை ஓயமாட்டான் போல இருக்கிறது. காலை, மாலை இருவேளையும் நித்திரை கொள்வதை கொஞ்ச காலமாக காலை அல்லது மாலை இரண்டில் ஒரு வேளையாக குறைத்துவிட்டான். ஒன்று ஹிட் ஆனால் ஒன்று மிஸ் ஆகிறது. பின்னேரம் அண்ணன் கரிகாலனுக்கு சங்கீத பள்ளி கச்சேரி இருக்கிறது. இப்போது நித்திரை கொள்ளாமல் விட்டால் பின்னர் சமாளிக்க ஏலாது. பொறுத்த நேரத்தில் போட்டு படுத்தி எடுத்துருவான். நித்திரை வந்தால் அந்த இடத்துலயே விழுந்து படுத்துவிடுகிற, அம்மா அல்லது அப்பாவின் மடியில் ஏறி தோளில் சாய்ந்து படுத்துவிடும் பிள்ளைகளை பெற்றவர்கள் பாக்கியசாலிகள்.

எங்களுக்கு பிரச்சினையே அந்த "நித்தா" விசயத்துலதான். அவனை பழுதாக்கினது அவனது அம்மம்மா. காலில் போட்டு ஆட்டி நித்திரை ஆக்கி பழக்க வேண்டாம் என்று எத்தனை முறை சொன்னாலும் கேட்காமல் ஆட்டோ ஆட்டென்று ஆட்டி அவன் தற்போது எங்களை ஆட்டுவிக்கின்றான். அந்த மனிசி விசா முடிஞ்சு ஊருக்கு போயிட்டுது, திரும்பி வரும் வரைக்கும் எங்களுக்குத்தான் ஆப்பு. அடுத்த விசாவிற்கு விண்ணப்பித்து ஆறு மாசங்களுக்கு மேல் ஆகிவிட்டது இன்னும் இந்த அறுவான்கள் ஒரு பதிலும் சொல்லவில்லை. சில வெள்ளக்கார மொக்குகள் போலின் ஹான்சனுக்கு கொடி பிடிக்கிறதைப் பார்த்தால் ஒரு வருடம் ஆனாலும் விசா கிடைக்காது போலத்தான் தெரிகிறது.

இவனை நித்திரை ஆக்குவது பழைய மொரிஸ் மைனர் காரை ஓட்ட தொடங்குவது மாதிரியானது. எப்பவாவதுதான் அதுவாகத் தொடங்கும், மற்ற நேரங்கள்ல தள்ளி தள்ளித்தான் தொடக்க வேண்டும். பல நேரங்களில் தொடங்கப் போற மாதிரியே வந்திட்டு கடைசியில் "டொக்" அடிச்சிரும். இன்றைக்கும் அந்தக் கதைதான். அதுவும் எங்களுக்குப் பிடித்த ஸ்பொட்டிஃபை பாடல்த்தொகுப்பு இருப்பது மாதிரி, அவனுக்கும் ஒரு நித்திரைக்கான பாடல் தொகுப்பு இருக்கிறது. அதிலிருந்து நேயர் விருப்பமாக அவன் கேட்கும் ஒவ்வொரு பாடலாக பாடி வர வேண்டும். “வண்ணத்து பூச்சி வண்ணத்து பூச்சி பறக்குது பார்”ல ஆரம்பித்து “வீல்ஸ் ஒன் த பஸ்” ஊரைச் சுற்றி ஒரு ஒன்பது முறை ரொளண்ட் அண்ட் ரௌண்ட் போய், இப்போது “குருவி ஒன்று மரத்திலே”க்கு வந்தாயிற்று. அந்தப் பாட்டில் தாய்க் குருவி “இறைவன் தந்த இறகினால், எழுந்து பறக்க பழகுவீர்” என்று குஞ்சுகளிடம் சொல்லும். இரண்டு குஞ்சுகள் தாயுடன் சென்றுவிட, ஒரு சோம்பேறி கூட்டுலேயே இருக்க அந்த பக்கமாக வந்த வேடன் அதை பிடித்துக்கொண்டு போய்விடுவான். வேடன் அந்த குருவிக் குஞ்சை ஒரு அரை மணி நேரத்துக்கு மேலாக திரும்ப திரும்ப கவர்ந்து சென்றுவிட்டான் ஆனால் எங்கட குஞ்சு இன்னும் நித்திரை ஆகவில்லை. கண்கள் சொருகி இந்தா,அந்தா என்று செல்கிறான், அப்பாடா வெற்றி என்று நினைக்கையில் பட்டென்று முழித்துவிடுகிறான்.

போர்வைகளுக்குள் மறைத்து வைத்திருந்த கைபேசி கிறுகிறுத்தது. அநேகமாக, பக்கத்து அறையில் ஒளிந்திருந்து வீட்டிலிருந்து வேலை செய்யும் மனைவி, “தூங்கிவிட்டானா?” என்று குறுஞ்செய்தியில் கேட்டிருப்பாள். அண்மைக்காலமாக எங்களுக்குள் அதிகமாக இடம்பெறும் உரையாடல், நித்திரை ஆக்குபவருக்கு மற்றவர் ஒரு அரை மணி நேர அவகாசமளித்து நித்திரையா? என்று கேட்பதும், அதற்கு ஓம், இல்லை என்று பதில் அளிப்பதும்தான். நமது வழக்கமான ராஜதந்திரங்கள் எதுவும் பலிக்காததால் இறுதி ஆயுதமாக காரில் வைத்து கொஞ்ச நேரம் ஓட்டிப்பார்க்கலாம், அப்படியாவது நித்திரை கொள்கிறானா பார்ப்போம் என்று அவனுக்குத் தெரியாமல் பதில் செய்தியை அனுப்பிவிட்டு, “வா டட்டா போவோம்” என்று ஆளை தூக்கிக்கொண்டு கிளம்பினேன். எனது நண்பரின் மகள் வீட்டின் ஓடுபாதையில் காரை பின்புறமாக நகர்த்தி வாசலை தாண்டுவதற்குள் தூங்கி விடுவாளாம். எங்கட ஆளிட்ட அதுவும் நடக்காது. அடிக்கடி நிறுத்தாமல் கொள்ளாமல் அதிவேக நெடுஞ்சாலையில் சில மைல் தூரம் ஒருசீராக ஓடினால், சில வேளைகளில் அந்த அதிசயம் நடக்கலாம்.

Pound Roadஇல் இருந்து M1 அதிவேக நெடுஞ்சாலைக்கு வலது பக்கம் திருப்புவதற்கிடையில் முன்னால் சென்று கொண்டிருந்த செம்மறி தடவிக்கொண்டு போனதில் சிவப்பு சமிக்ஜை விழுந்துவிட்டது. வந்த கோவத்தை காரின் ஒலிப்பானில் இடைவிடாது இசைத்து காட்டினேன். பச்சை விளக்கு விழுந்ததும் T2 Lane இற்குள் புகுந்து, நெடுஞ்சாலைக்குள் நுழைவதற்கான இரண்டு வரிசைகளில் காத்திருந்த வாகனங்களுக்கு இடையில் புகுந்து ஒருவாறாக M1 இற்குள் ஏறிவிட்டேன். இனி Cruise Control இல் மணிக்கு 100 Km வேகத்தில் காரை செலுத்தினால் எப்படியும் Springvale Road இற்கு வெளியேறும் பாதை வருவதற்குள் ஒரு முடிவுக்கு வந்து விடலாம்.

பேசாமல் வெள்ளைக்காரர் போல பிறந்ததிலிருந்தே குழந்தைகளை அவர்களுக்கென்ற தனி அறையில் படுக்க வைத்திருந்தால் இந்த பிரச்சினை வந்திராதுதான். ஆனால் பச்சைகுழந்தையை தனியே விட்டுவிட்டு ஒளிப்படக்கருவி வழியாக பார்த்து

மகிழ்வது(?) நமது வளர்ப்பு முறைக்கு சரி வருமா? இப்படித்தான் ஆறு மாத குழந்தைக்கு தந்தையான என்னுடைய அலுவலக நண்பன் லூக் ஒரு நாள் கவலையாக இருந்தான். ஏன் என்று கேட்டதற்கு, "தூக்கதிற்கான ஆலோசகர்" மூலம் பிள்ளைக்கு "தூக்க பயிற்சி" கொடுத்து வருவதால் மன அழுத்தமாக இருப்பதாக கூறினான். அது என்னடா ஆறு மாத குழந்தைக்கு பயிற்சி என்று கேட்டால், குழந்தை தூங்க தயாரானதும் கொஞ்ச நேரம் தூக்கி வைத்திருந்துவிட்டு தொட்டிலில் போட்டுவிட்டு அறைக்கு வெளியே காத்திருக்க வேண்டுமாம், குழந்தை வீறிட்டு அழுமாம். அப்படி அழுதவுடன் ஓடிசென்று தூக்கக்கூடாதாம், ஐந்து நிமிடம் கழித்து சென்று, குழந்தையை ஆசுவாசப்படுத்திவிட்டு மறுபடியும் வெளியே சென்றுவிட வேண்டுமாம், மறுபடி குழந்தை அழுதால் இந்த முறை பத்து நிமிடம் கழித்து உள்ளே செல்ல வேண்டுமாம். இப்படி உள்ளே செல்லும் நேரத்தை படிப்படியாக கூட்டி வர நாளடைவில் குழந்தை அதுவாகவே தூங்க பழகிவிடுமாம். இது என்னடா நாய்க்கு சுச்சா போக பழக்குவது மாதிரி நாசமறுந்த பயிற்சி என்று நினைத்துகொண்டேன். சமரன் தூங்கிவிட்டானா என்று அடிக்கடி கண்ணாடியில் நோட்டம் விட்ட படி நினைவுகளில் மூழ்கி இருக்க, பின்னால் இருந்து சிகப்பு,நீல விளக்குகள் திடீரென மின்ன ஒரு கறுப்பு கார் வேகமெடுத்து எனக்கு சமாந்தரமாக வந்தது.

அது ஒரு சாதாரண கார் போல தோற்றமளிக்கும் போலீஸ் கார் என்று புரிவதற்குள், அதற்குள் இருந்த வெள்ளைக்கார போலீஸ்காரர் எனது வண்டியை ஓரமாக்கி நிறுத்துமாறு சைகை செய்தார். அவர் சொன்னபடி வண்டியை நிறுத்தியதும், எனக்கு முன்பாக தனது வண்டியை நிறுத்திவிட்டு ஒரு போலீஸ்காரர் இறங்கி வந்தார். இது என்ன கோதாரி என்று நினைத்துக்கொண்டு என் பக்க கண்ணாடியை கீழே இறக்கினேன். எனதருகில் வந்தவர், Pound Road இலிருந்து உன்னை கவனித்து வருகிறோம், நீ வண்டி ஓட்டும் முறை ஒழுங்கற்றதாக இருக்கிறது. "Are you under the influence of Alcohol?" என்றார். நான் பதறிப்போய் "பின்னால இருக்குறவன நித்திரை ஆக்க முயல்கிறேன், that's the only influence I'm under ஹிஹி" என்று வழிந்தேன். அவர் முறைத்த படி "Are you sure, mate?" என்றார். அப்பொழுது தான் திரும்பி பார்த்தேன். பல மணி நேரமாக தூங்கும் அனந்தசயனன் போல சமரன் அசந்து தூங்கிகொண்டிருந்தான். அப்பாடா துன்பத்திலும் ஒரு இன்பம் என்று எண்ணுகையில், "நீ குடித்து விட்டு வண்டி ஓட்டுகின்றாயா என்று சோதனை செய்ய வேண்டும்" என்று Breath Analyser கருவியை நீட்டினார். அடேய், பேராதெனிய கம்பஸ்சில நாலு வருஷம் படிச்சும் குடிக்கப்பழகாத ஆளடா நான் என்ற இறுமாப்புடன் அந்த ஊதாங்குழலை கதவை திறந்துவாங்கி ஒரு ஊது ஊதி குடுத்தேன். அதனை வாங்கி பார்த்தவர், "You are good to go, but please drive carefully" என்றார். அது எங்களுக்கு தெரியும், நீர் உம்மட வேலைய பாரும் அய்சே என்று சொல்லாமல் சொல்வது போல கதவை "படார்" என்று அடித்து மூடவும், பின்னால் "வீல்ல்ல்ல்" என்று சமரன் அழ ஆரம்பித்தான். நான் திடுக்கிட்டு போய், "சுகம் வரும் ஆள் தப்பாது" என்றேன். போலீஸ்காரர், What did you say? என்று கேட்க "Operation success but patient dead" என்றேன்.

# *Parenting Across Generations:*
# Building Trust and Independence in a New Country

**Poongulali Govindaraja**

### The First Generation Journey

For many Sri Lankan Tamil parents, migration was not a decision made easily. It was often the result of war, discrimination, and the urgent need to protect their family. Many left behind their homes, careers, support networks, and everything familiar to start again in countries such as the United Kingdom, Canada, Australia, United States and many more.

In this new environment, survival became the main priority. Parents took whatever jobs they could find, even if they were far from their original professions. They focused on finding stable housing, choosing good schools, and keeping their children connected to their culture through Tamil language classes, religious practices, and festivals.

The mission was clear, give the next generation a life free from the struggles they endured. In many cases, this goal was achieved, and their children grew up to become educated, successful professionals. Parents felt a deep sense of pride and validation, knowing their sacrifices had been worth it.

### The Challenge After Success

A new question often arises once the child reaches adulthood. What happens when they want to make their own choices?

They might choose a career path different from what their parents envisioned, decide to change fields entirely, or enter an interracial relationship. These moments test the parent and child relationship more than any school exam or job interview ever could.

How a parent responds in these moments often determines whether the relationship continues to grow based on mutual trust or becomes strained with resentment and misunderstanding.

### Control or Guidance

Many first-generation parents have spent decades making decisions for their children, from what school they attend to the extracurricular activities they pursue. Out of love and fear, they try to shape every step of their child's life. This fear can come from many places, such as worrying that their child will not be successful, fear of judgment from family, friends, or the community, fear of the unknown and uncertainty of life, or even their own anxieties shaped by past experiences.

However, this style of parenting can unintentionally limit a young person's ability to make independent decisions. The result is often an adult who is anxious about failure, unsure of their choices, and overly dependent on external approval. Success starts to feel like the only acceptable outcome, and failure becomes a source of shame.

A helpful analogy is this: a parent's job is not to control where their child swims but to teach them how to swim confidently. Whether they choose a river, a lake, or the ocean is their decision. The goal is to ensure they have the skills and resilience to swim anywhere.

### Reflecting on the "Why"

When parents struggle to accept their child's decisions, it is worth pausing to reflect on why.

Is it a genuine concern that the child might make a harmful decision?

Or is it the parent's own fear, such as fear of societal judgment, gossip, or the possibility that their child might fail or make a choice that reflects badly on the family?

Could it be anxiety about social status, or a desire for validation through their child's achievements?

These questions are not always easy to confront, but they are essential. Recognising the difference between guiding a child for their wellbeing and controlling them out of fear is a crucial step toward building a healthier relationship.

**Teaching Values Over Outcomes**

One of the most powerful ways parents can support their children is by focusing on instilling strong values rather than dictating specific life choices. When a young person has a clear sense of what is important, such as family, integrity, compassion, resilience, and respect, those values will guide their decisions around career, relationships, and lifestyle.

Values are taught not just through lectures but through parent's modelling, everyday conversations, shared experiences, and family rituals. Something as simple as a weekly movie night or regular dinner conversation from a young age creates space for open dialogue. Over time, this builds trust, so when challenges arise during the teenage years or early adulthood, the child feels safe turning to their parents for guidance.

**A New Understanding of Success**

For first-generation parents, success was about survival, stability and security. For their children, success might mean purpose, creativity, happiness, or balance. These definitions do not have to conflict, but they do require understanding and flexibility.

Parenting in a new country is about more than providing safety and opportunity. It is also about nurturing a relationship where trust, respect, and communication can grow. The ultimate goal is not to shape every detail of your child's future but to raise a confident, capable individual who can navigate life on their own terms and still choose to share that life with you.

**By Thadam**

Thadam is a nonprofit organisation run by volunteers based in Sydney and Victoria, that works to raise mental health awareness within the Tamil community. Thadam is dedicated to normalising conversations about mental health through a cultural lens, breaking stigma, and giving people the tools to speak about mental health without shame. Thadam does this because mental health is a part of overall health, and talking about it openly helps identify challenges early and seek support before they become more serious.

www.thadam.com.au

@thadamofficial

# சிலம்பில் சிதறுண்ட மணிகள்



கேதா

2000 வருடங்களுக்கு முற்பட்ட ஒரு மாலைப்பொழுது. சோழ நாட்டின் காவிரிப்பூம்பட்டினம். காவிரி வந்து கடலுடன் கூடும் கழிமுகக்கரை. தவழும் அலைகள் சுருதி மீட்ட, குளிர் நிலவு பொழிய, காதல் மயக்கத்தில் கோவலனும் மாதவியும் கானல் வரி பாடிக் களித்திருக்கிறார்கள். இரண்டு பேருமே இசையில் தேர்ந்தவர்கள். காதலிலும் தேர்ந்தவர்கள்தான். முதலில் கோவலன் தொடங்குகிறான். மாதவி மயங்குகிறாள்.

விரல்கள் யாழின் நரம்புகளில் விளையாட, காதல் வழியும் கவிக்குத் தோதான பண்சேர்த்துக் கோவலன் பாடுகிறான். மெய்ம்மறந்து இரசிக்கிறாள் மாதவி. இப்போது மாதவியின் முறை. ஆடலில் மட்டுமல்ல, பாடலிலும் தான் தேர்ந்தவள்தான் என்று, யாழ் மீட்டிப் பாடுகிறாள் மாதவி. காதலியின் கானல் வரிகளில் வருகின்ற



ஆடவன் நான்தானோ, இல்லை வேறொருவனோ என்று பதைபதைக்கிறது கோவலனின் மனம்.

கானல் வரி யான் பாட, தான் ஒன்றின்மேல் மனம் வைத்து,

மாயப் பொய் பல கூட்டும் மாயத்தாள் பாடினாள்

மாதவிமீதான காதல், மயக்கம், மோகம் யாவும் உடையக் கோபம் தலைக்கேறுகிறது.

அதுவரை உள்ளம் கவர்ந்திருந்த ஒப்பற்ற பேரழகி ஒருகணத்தில் “மாயப் பொய் பல கூட்டும் மாயத்தாள்” ஆகிவிட்டாள்.

நம்பியவளைப் பிரிவதில் தேர்ச்சிபெற்ற கோவலன் மாதவியையும் கைவிட்டு, மீண்டும் கண்ணகியிடம் போகிறான். கண்ணகி மீண்டுவந்த கணவனை கோபமின்றி ஏற்றுக்கொள்கிறாள். மாதவி கைவிட்டுப் போனவனை எண்ணிக் கண்ணீர்வடிக்கிறாள்.

கட்டிய மனைவிக்கும் உண்மையில்லாமல், அவளைக் கைவிட்டுப் பின் தேடிய காதலிக்கும் உண்மையில்லாமல், உற்ற தொழிலில் தேர்ச்சியில்லாமல், உருப்படாமல் உழன்றாலும் கோவலனுக்கு எங்கிருந்து வருகிறது இந்தத் திமிர்?

கோவலனின் கோபம் இளங்கோவடிகளுக்கே கொஞ்சம் புதினமாகத்தான் இருந்திருக்கிறது. எப்பிடி நீ கோவிக்கலாம்? கோவலனின் ஊழ்வினைதான் யாழில் வந்தமர்ந்து அவனுக்குக் கோபத்தையும் கொடுக்கிறதோ என்று யோசிக்கிறார்.

“யாழ்-இசைமேல் வைத்து, தன் ஊழ்வினை வந்து உருத்தது ஆகலின்”

பாரதிபள்ளி அரங்கேற்றிய சிலப்பதிகாரம்

இசை நாடகத்திலே வருகிற கானல்வரிக் காட்சியைப் பார்த்தபோது எனக்குள் இத்தனை கேள்விகளும் எழுந்தன.

திரு மாவை நித்தியானந்தன் அவர்களின் எழுத்தில், திருமதி பாகீரதி பார்த்திபன் அவர்களது இயக்கத்தில் பாரதி பள்ளி மாணவர்கள் நடித்த சிலப்பதிகாரம் இசைநாடகம் 2024-2025 ஆண்டு காலப்பகுதியில் மூன்று முறை மெல்பேர்னிலும் இரண்டு முறை சிட்னியிலும் மேடையேற்றப்பட்டது. எழுத்து, இயக்கம், பாடல்கள், இசை, நடிப்பு, அரங்க வடிவமைப்பு என்று ஒவ்வொன்றும் மிகச் சிறப்பாக அமைந்திருந்தன.

ஒரு படைப்பு உன்னதமாக அரங்கேற்றப் படும்போது நடித்தவர்கள், இசை, எழுத்து, இயக்கம் என்று பிரித்துப்பார்க்காமல் மனம் முழுமையாக பாத்திரங்களின் உணர்வோடு ஒன்றிப்போய்விடுகிறது. பெரும்பாலும் இரண்டாம் தலைமுறை சிறுவர்களை வைத்து, தமிழின் மிகத் தொன்மையான காப்பியமான சிலப்பதிகாரத்தை, அவுஸ்திரேலிய தமிழர்கள் இரசிக்கும்படி அரங்கேற்றுவது சாதாரண விடயமில்லை. அதன்பின்னால் அளவுகடந்த உழைப்பும், திறமையும் இருக்கிறது.

தமிழை உச்சரிக்க வைப்பது, வசனங்களை மனனம் செய்ய வைப்பது, எல்லாருக்கும் மேலாக மாதக்கணக்கில் மாணவர்களைப் பயிற்சிக்கு வரவைப்பது, இதையெல்லாம் எப்படி சாதித்தார்கள் என்று ஆச்சரியமாயிருந்தது. பாரதி பள்ளி தொடர்ச்சியாக முன்னெடுத்துவரும் நாடக விழாக்களால் இந்தச் சிறார்கள் புடம்போடப்பட்டவர்கள். பல ஆண்டுகளாக விதைக்கப்பட்ட விதைகளில் உருவான வனம் இந்தச் சிலப்பதிகாரம்.

இருந்தாலும் பொறுப்பில்லாத கோவலனை, அவன்மீது கோபம் கொள்ளாத கண்ணகியை, கானல்வரி கேட்டுக் கைவிட்டுப் போகும் காதலனை எண்ணிக் கண்ணீர்வடிக்கும் மாதவியை, அவுஸ்ரேலிய பண்பாட்டுச் சூழலில் வாழும்



இந்தச் சிறார்கள் எப்படிப் புரிந்துகொள்கிறார்கள் என்று தெரிந்துகொள்ளும் ஆசை எழுந்தது.

முதலில் நான் நாடகத்தை எழுதிய திரு மாவை நித்தியானந்தன் அவர்களோடும், இயக்கிய திருமதி பாகீரதி அவர்களோடும் உரையாடினேன்.

சிலப்பதிகாரத்தை இந்தச் சிறார்களுக்குச் சொன்னபோது அவர்கள் அதை எப்படி எதிர்கொண்டார்கள் என்று கேட்டேன்.

“ஆரம்பத்தில் அவர்களிடம் நிறையக் கேள்விகள், ஆச்சரியங்கள், குழப்பங்கள் இருந்தன. குறிப்பாக பதின்ம வயதில் திருமணம் செய்தது அவர்களுக்கு வினோதமாக இருந்தது. இருந்தாலும் நாங்கள் ஒன்றை ஆரம்பத்திலேயே தெளிவாகச் சொன்னோம். இந்தக் கதை நடைபெற்ற காலம் வேறு, இன்றைய காலம் வேறு. ஆகவே அதனை, இக்கால நடைமுறைகளோடு பொருத்திப் பார்க்க வேண்டாம்”

என்றார் மாவை நித்தியானந்தன்.

“அதை ஆரம்பத்தில் தெளிவுபடுத்தியபிறகு, மாணவர்கள் பெரியளவில் கேள்விகள் கேட்கவில்லை. தமக்கான பாத்திரங்களை தேர்ந்தமுறையில் உள்வாங்குவதில் கவனம் செலுத்தினார்கள். அதிலும் பெரும்பாலும் தாமே தம்மை மேம்படுத்த கடுமையாக சிரத்தை எடுத்துக் கொண்டார்கள். அது மிகவும் நிறைவாக இருந்தது. எனது மகன் சாய் கோவலனாய் நடித்திருந்தார். அவர் ஏனம்மா எனக்கு இப்பிடி ஒரு பாத்திரம் தந்தனீங்கள். வேறை ஏதாவது தங்கோவன்

என்று கேட்டார். அந்தளவுக்கு கோவலனில் அவருக்குக் கோவம்" என்றார் நாடகத்தை இயக்கிய பாகீரதி.

காலங்காலமாக காப்பியப் பாத்திரங்களே வாழ்க்கையில் நாம் பின்தொடரவேண்டிய இலட்சிய மாந்தர்கள் எனும் தமிழ்ச்சமூகத்தில் வளர்ந்த எனக்கு இந்த அணுகுமுறை சற்று அதிர்ச்சியாகத்தான் இருந்தது. இந்தக்காலத்திற்குப் பொருந்தாததை எதற்கு மிகக்கடுமையாக பயின்று மேடையேற்றவேண்டும் என்ற ஐயமும் எட்டிப்பார்த்தது.

அடுத்ததாக கோவலனாய் வந்த சாயோடு உரையாடினேன்.

"கோவலனிடம் இருந்து நீங்கள் என்ன கற்றுக் கொண்டீர்கள்?"

"ஒரு ஆண் தன்னை நம்பிய பெண்ணுக்கு உண்மையாக இருக்கவேண்டும். வாழ்க்கையில் எந்தநிலையிலும் அதை விட்டுக்கொடுக்கக்



கூடாது என்று உறுதியாக இருக்கிறேன்"

கண்ணகியின் கற்பின் பெருமையைப் பேசிய நாங்கள் கோவலனின் கீழ்மையிலிருந்து அதிகம் கற்றுக்கொள்ள முனைந்ததாய் நினைவில்லை. புலம்பெயர் நிலத்தின் சிறுவன் சாயின் பதில் இன்றைய தலைமுறை தெளிவாக இருக்கிறது என்ற நம்பிக்கையைக் கொடுத்தது.

"காதல் காட்சிகளில் நடிப்பதுதான் சற்றுச் சிரமாக இருந்தது. இருந்தாலும் சரியான வழிகாட்டல் இருந்ததால் பழகிவிட்டேன்" என்றார் சாய்.

"பதின்ம வயது சிறுவர்களுக்கு காதல், பிரிவு இவையெல்லாவற்றையும் சொல்லிக் கொடுப்பது அவ்வளவு எளிதல்ல. கத்தியில் நடப்பது போன்ற அனுபவம் அது. அதிலும் சொந்தமகனுக்குச் சொல்லிக் கொடுப்பது இன்னும் சற்றுச் சிக்கல்தான். இருந்தாலும் சாய் அதிகாலையிலேயே அலாரம் வைத்து எழுந்து பயிற்சி செய்ததைப் பார்த்தபோது வந்த மகிழ்ச்சி, எல்லா அயற்சியையும் அகற்றிவிட்டது" என்று சொன்னார் பாகீரதி.

கண்ணகியின் கற்பின் பெருமையும், அறச்சீற்றமும் காலங்காலமாக விதந்துரைக் கப்பட்டுவரும் விடயங்கள். கற்பில் சிறந்தவள் கண்ணகியா சீதையா என்று பட்டி மண்டபங்கள் மெல்பேர்ன் மேடைகளில் கூட எட்டிப்பார்த்திருக்கின்றன. கற்பை எப்படி இவர்கள் புரிந்து கொண்டார்கள் என்பது எனது அடுத்த கேள்வி.

"கற்பு உடல் சார்ந்த, ஆண் பெண் சார்ந்த ஒன்று என்றில்லாமல் அது ஒரு உறுதிப்பாடு என்றே நாம் அவர்களுக்குச் சொல்லியிருந்தோம். அதனால் அதுபற்றி அவர்களுக்கு அதிகம் குழப்பங்கள் இருக்கவில்லை " என்கிறார் மாவை நித்தியானந்தன்.

அடுத்ததாக கண்ணகியாக நடித்த மஹிஷாவுடன் உரையாடினேன். உயர்த்திய சிலம்பும், விரித்த தலைமுடியும், அறச் சீற்றத்தின் அனல் மொழியாக மேடையில் பார்த்த கண்ணகி, கேள்விகளுக்கு வந்தாறுமூலையில் வந்தமர்ந்த கண்ணகிபோல மிக நிதானமாகப் பதிலளித்தார்.

"அப்பாவிக் குடும்பப் பெண்ணாய் இருந்த கண்ணகி, கணவனின் சாவுக்கு நீதிகோரி, அரசவைக்கு அச்சமின்றிப் போனதிலிருந்து , பெண்களால் எதுவும் முடியும் என்ற நம்பிக்கை பிறக்கிறது. இருந்தாலும் கண்ணகி ஒரு பரிதாபத்திற்குரிய பெண்ணாகத்தான் இருக்கிறார். கணவனால் கைவிடப்பட்டு, எந்தத் தவறும் செய்யாவிட்டாலும், கனிசமான காலத்தைக் கண்ணீருடன் கழித்த கண்ணகியைப் போல

இன்றும் பல பெண்கள் இருக்கிறார்கள். பாண்டிய மன்னன்மீது கடும் சீற்றத்தை வெளிப்படுத்திய கண்ணகி, கோவலனைக் கண்டிக்கவோ, கோவிக்கவோ செய்யாமல்விட்டது தவறு . இன்றைய பெண்கள் அப்படிச் செய்யமாட்டார்கள்"

அப்படியென்றால் இப்பொழுது காலம் மாறி எமது மரபுகள் தொலைந்துபோகின்றன என்று நினைக்கிறீர்களா என்று கேட்டேன்.

"இன்றைய பெண்கள் கணவனாய் இருந்தாலும் தவறு செய்தால் தட்டிக் கேட்கத் தயங்காதவர்களாக இருக்கிறார்கள். அது நல்லதுதானே" என்று சிரித்தார் கண்ணகி.

படைப்பில் பங்கேற்றவர்களின் புரிதல் என்பதை இங்கே பகிர்ந்திருக்கிறேன். பார்வையாளர்களின் புரிதல் எப்படி இருந்தது? இளவேனில் சஞ்சிகையின் வாசகர் முற்றம்போல இந்தச் சிலப்பதிகார நாடகத்தைப் பார்த்தவர்களின் அனுபவங்களைப் பகிர்துகொள்ள ஒரு நிகழ்வை ஒழுங்கமைத்தால் மிகப் பயனுள்ளதாக அமையும். அவ்வாறான செயற்பாடுகள் பாரதிபள்ளியின் அரும்பணிக்கு அர்த்தமுள்ள அங்கீகாரமாகவும் இருக்கும்.

படைப்புகளைக் கொண்டாடுவதும், கலைஞர்களை ஊக்குவிப்பதும் எவ்வளவு அவசியமோ அதேபோல அவைதொடர்பான கலந்துரையாடல்களும் ஆக்கபூர்வமான விமர்சனங்களும் ஒரு சமூகத்திற்கு அவசியம். போற்றிப் புகழ்ந்திருப்பதையும் தாண்டிப் பொருள் உணர்ந்த ஆழமான கலந்துரையாடல்கள், இலக்கிய வாசிப்புகள், மறுவாசிப்புகள் எமது விழுமியங்களை புரிந்து கடத்துவதற்கு வழிசமைக்கும்.

எல்லாவற்றுக்கும் மேலாக அடுத்த தலைமுறைக்குக் கற்றுக்கொடுக்க நினைக்கும் நாம் அவர்களிடமிருந்து பல நல்ல விடயங்களைக் கற்றுக்கொள்ளவும் இதுபோன்ற கலந்துரையாடல்கள் களம் அமைக்கும்.

தமிழ்ச் சமூகத்திற்கு ஒரு பெரும் பணியை பாரதி பள்ளி ஆற்றியிருக்கிறது. அதிலிருந்து அடுத்த படிகளைத் தேடி நகர்வது நம் கடன்.




# பெண்Money



பாலா

மெல்போர்ன் குளிரை ஒரு ஸ்பூனில் எடுத்து வாயில் போட்டுக் கூடவே சென்னை வெயிலையும் சேர்த்துச் சாப்பிட்டதுபோல் ஐஸ் கிரீமுடன் மீனா செய்த வெதுவெதுப்பான குலோப்ஜாமூன் நாக்கு நுனியிலிருந்து தொண்டைக்குள் வழுக்கிக் கொண்டு போன சுகத்தைக் கண்ணை மூடி ரசித்துக் கொண்டிருந்த ராம் , அப்பா கேம் டைம் என்ற அர்ச்சனாவின் குரலைக் கேட்டு முன் ஹாலில் இருந்த ஆண்கள் எல்லோரையும் பெரிய டீவி இருந்த அறைக்கு அழைத்து வந்தார்.

தொலைக்காட்சியில் தெரிந்த Kahoot படத்தைப் பார்த்தவுடன், ரெஹ்மான் ரோஹிணியைப் பார்த்து, இப்படி அருமையா சாப்பாட போட்டுவிட்டு இப்படி மூளைக்கு வேலை குடுத்தா எப்படி என்று கேட்க, ரோஹிணி ஐயோ இதற்கும் எனக்கும் சம்பந்தம் கிடையாது, அது அப்பா பொண்ணு வேலை என்று சொல்லி, மீனா, ஜெரீனா இருந்த சோபாவில் போய் நடுவில் உட்கார்ந்து கொண்டாள்.

முதல் சுற்று , ரீல் அண்ட் ரீல்ஸ் என்றதும் ரோகிணியும் மீனாவும் , ஜெரீனாவை பார்த்துக் கண்டிப்பா நாம தான் ஜெயிக்கிறோம் என்று கையை தட்டிக் கொண்டார்கள். ரெஹானா ஆமாம், அம்மாவுக்குத் தெரியாத படமும் கிடையாது, அவங்க கமெண்ட் போடாத ரீலும் கிடையாது என்று நக்கல் அடித்தாள். ஜெரீனா IT –இல் வேலை பார்க்கவில்லை என்றாலும்,

ஆன்லைன் வணிகத்தில் கில்லாடி. குழுவில் உள்ள எல்லோருக்கும் ஜெரீனா தான் கூகுள். அதுபோக எல்லா influencerkkum கருத்து மூலம் வாழ்க்கை கொடுக்கும் நல்ல மனசு. முதல் சுற்றில், ரெஹானா மற்றும் மீனாவின் மகள் கீதாவை விட மூன்று மதிப்பு எடுத்து பெண்கள் கூட்டம் வெற்றி அடைந்தது.

அடுத்த சுற்று பைனான்ஸ் என்று அர்ச்சனா சொன்னதும் , ராஜா யார் நீங்களா பைனான்ஸ் சுற்று நடத்தப்போகிறீர்கள் என்று ஆச்சிரியமாக கேட்டார். மாமா நாங்கள் மூன்று பேரும் இப்போது Insurance and superannuation சீனியர் ஆய்வாளர் அதனால் கவலைப்படாதீர்கள் என்றாள்.

சரி, நீங்க விளையாடுங்கள் , நாங்கள் பாத்திரத்தை எல்லாம் கழுவி வச்சுட்டுவரோம் என்று அம்மாக்கள் நழுவப் பார்க்க, அர்ச்சனா அவர்களைப் பார்த்து, இந்த சுற்று முக்கிய ஆட்டக்காரங்களே நீங்க தான் எங்கே போகிறீர்கள் என்று மூவரையும் உட்காரவைத்தாள்.

அதைக் கேட்டதும், ரோஹிணிக்கு மட்டும் கொஞ்சம் உதறல் எடுத்தது. மீனா, ராஜாவோடு அக்கௌன்டிங் தொழிலில் கூட சேர்ந்து வேலை செய்யவில்லையென்றாலும், அவரது அனைத்து முதலீடுகளையும் அவள் தான் பார்த்துக் கொள்கிறாள், ஜெரீனாவோ வீட்டு வரவு செலவு மட்டும் இல்லாமல் ரஹ்மானின் வரி கட்டுவது வரைக்கும் அவள் தான் செய்கிறாள். அதையே சின்ன சின்ன ரீல்ஸ் ஆகப் போட்டு வீட்டு பட்ஜெட்டை எப்படிச் செய்வது என்று கருத்தில் பாடம் வேறு எடுக்கிறாள். ஆனால், ரோஹிணியோ, ராமுக்குச் சமமாகச் சம்பாதித்தாலும் , அவளுக்குச் செலவுக்குத் தேவையான பணத்தை வைத்துக்கொண்டு மீதி சம்பளத்தை ராம் சொல்லும் வீட்டுக் கடன் கணக்கில் போடுவதோடு சரி. அதற்கு மேல் பண விசயத்திலோ, மற்ற எந்த விஷயத்திலும் தலையிடுவது இல்லை. எப்போதாவது கொஞ்சம் தெரிந்து கொள்ளலாம் என்று கேட்டால், அவ்வளவுதான், கல்லூரி வாத்தியார் போல ராம் பாடம் எடுக்க ஆரம்பித்து விடுவார், அதற்குப் பயந்தே அவள் எதையும் கேட்பதில்லை.

முதல் கேள்வி, நீங்கள் எப்பொழுது உங்கள் finfree ஸ்டேட்டஸ்-ஐ அடைவீர்கள் என்றதும், மூன்று பேரும் அப்படி என்றால் என்ன என்று கேட்டார்கள். கீதா, அம்மா, financial freedom, அதாவது உங்களுடைய மாத செலவுக்கு உங்கள் வேலையை எதிர்பார்க்காமல் இருக்கும் நிலைமையை எப்போது அடைவீர்கள் என்று விளக்கம் கூறினாள்.

மீனாவும் , ஜெரீனாவும் யோசிக்க ஆரம்பிக்க, ரோஹிணி ராமை பார்த்து அசட்டு சிரிப்பு சிரித்தாள்.

அர்ச்சனா, ரெஹானா மற்றும் கீதாவை பார்த்து கேட்க, அவர்கள் இருவரும் 45 வயது என்று ஏற்கனவே இதை பற்றி பேசியதை போல் பதில் அளித்தார்கள்.

அதைக் கேட்டு கொஞ்சம் குழப்பத்துடன், ரஹ்மான் ராமிடம், புதுசா எதுவும் labour பார்ட்டி superannuation சட்டத்தை மாத்திட்டாங்களா என்ன?, இந்த பசங்கள் 45 வயசில் செட்டில் ஆகிடுவோன்னு சொல்லுகிறார்கள் என்று கேட்டதும், போனில் அமெரிக்கா சந்தை நிலவரத்தைப் பார்த்துக் கொண்டிருந்த ராஜா, சிரித்துக்கொண்டே, அட அவர்கள் நம்மள மாதிரி, முதலீட்டில் வர போற பணத்தில் செட்டில் ஆகத் திட்டம் போட்டு வச்சுருக்காங்க என்று விளக்கினார். கூடவே, தான் எப்பாவோ அந்த நிலைமைக்கு வந்தாயிற்று என்று அவர் பதிலையும் அர்ச்சனாவைப் பார்த்து கட்டை விரலை உயர்த்தி காமித்தார்.

ராமுக்குத் தான் போன வருடம் “the boat we missed “ என்ற தலைப்பில் முதல் தலைமுறையினர் தவறவிட்டதை தெரிந்துகொள்ளத் தவறிய “financial freedom opportunities “ நடத்திய நிகழ்ச்சியில் இந்த மூன்று பெண்களும் அவர்கள் படிப்புக்குச் சம்பந்தமாக இருக்கும் என்று கலந்துகொண்டதின் பலனைக் கண்டு சந்தோஷப்பட்டார்.

ராம் , ரெஹ்மானுக்கும் சேர்த்து நாங்கள்

superannuation வயதில் தான் finfree நிலைமைக்கு வரமுடியும், அதுவும் எந்தளவிற்கு அதில் எங்கள் பங்கிற்க்கு கூடுதலாக (self contribution ) பணம் போட்டு அதை வளர்த்து விட்டிருக்கின்றோம் என்பதைப் பொறுத்து என்று தாங்கள் தவறவிட்ட காலங்கள் மற்றும் வாய்ப்புகளை எண்ணி வருந்தி தன் பதிலைச் சற்றே கவலையுடன் தெரிவித்தார்.

அர்ச்சனா அம்மாக்கள் கூட்டத்தைப் பார்த்து பதில் தயாரா என்று கேட்டதும், மீனா , மாமா சொன்ன மாதிரி, நாங்கள் எப்போவோ அந்த நிலைமைக்கு வந்தாயிற்று என்று பெருமையாகச் சொல்ல, ஜெரீனா ரெஹ்மானை பார்த்து, ஏன்பா, நம்மளும் அப்படிச் சொல்லலாம் இல்லையா என்று யோசனையுடன் கேட்டாள். ரெஹ்மான் சிரித்துக்கொண்டே ரெஹானாவை பார்த்து, பார் உங்கள் அம்மா உங்களுக்கென்று சொன்ன வீட்டை அவளுக்கு கேட்கிறாள் என்று தனக்கு இதற்குப் பதில் தெரியாததை மழுப்பலாகச் சமாளித்தார்.

ராம் ரோகிணியின் நிலைமையைப் பார்த்து, அவங்களுக்கும் எங்கள் Superannuation வயதில் தான் என்று உதவிக் கரம் நீட்டினார்..

ஒருவழியா பதில் சொல்லியாச்சு என்று நினைத்து மூச்சு விட்ட ரோஹிணி, அர்ச்சனா இன்னமும் அவர்களையே பார்ப்பதை பார்த்து கொஞ்சம் குழம்பினாள்.

அர்ச்சனா ரோஹிணி, மீனா, ஜெரீனாவை பார்த்து அம்மா, அத்தை,என் கேள்வியை நல்லா கேளுங்க, நீங்கள் எப்போ அடைவீர்கள், அதாவது நீங்களாக எப்போ finfree -ஐ அடைவீர்கள் என்று கொஞ்சம் அழுத்தமாக கேட்டாள்.

அதற்கு இரண்டுபேருக்கும் தான் அந்த பதில், அதிலென்ன அம்மாவுக்குத் தனி என்று ராம் சொன்னதும் , அர்ச்சனா ரோஹிணியைப் பார்த்து அப்படியாமா என்று கேட்டாள்.

அந்த “அப்படியாமா” என்ற கேள்வி ரோஹிணியை மட்டும் இல்லாமல் கீதா மற்றும் ஜெரீனா வையும் ஒரு நிமிடம் யோசிக்க வைத்தது.

அது வரைக்கும் பேசாமல் இருந்த கீதா, ராஜாவைப் பார்த்து, நீங்கள் ஒவ்வொரு முதலீடு பண்ணும் போதும், எங்களுக்கு அப்புறம் இது உனக்குத் தான் என்று சொல்லுவீர்கள், ஆனால் என்றைக்காவது, அம்மாவிற்கு என்று யோசித்திருக்கீர்களா என்று கேட்டாள். அட, நான் போன பிறகு அவளுக்கு தானே, அதற்கு அப்புறம் தான் உனக்கு என்று அவள் தலையில் ஒரு கொட்டு கொட்டினார்.

கீதா,மீனாவைப் பார்த்து , அப்படியாமா, அப்பாவோட finfree தான் உங்களுக்குமா என்று கேட்டதும் மூன்று அம்மாக்களுக்கும் நெற்றிப் பொட்டில் அடித்தாற்போல் புரிந்தது அந்த கேள்வியின் அர்த்தம். அவர்களுக்கு மட்டுமின்றி மூன்று அப்பாக்களுக்கும் அந்த கேள்வியின் பலம் புரிந்து அமைதியாக யோசிக்க ஆரம்பித்தார்கள் .

இந்த மாதிரி கேள்வி கேட்பதற்கு, பெரிய superannuation நிறுவனத்தில் வேறு வேறு பிரிவில் வேலை பார்ப்பது மட்டுமின்றி, அவர்கள் நண்பர்கள் குழு மாதத்திற்கு ஒரு பார்ட்டி, வருடத்துக்கு ஒரு நாடு என்று உலகத்தைச் சுற்றுவது என்று செலவழித்தாலும், வாழ்க்கையில் பொருளாதாரத்தில் யார் உதவியும் இல்லாமல் சுதந்திரமாக இருப்பதே முதல் குறிக்கோளாக வைத்திருப்பதும் ஒரு காரணமே.

எல்லோரும் அமைதியாய் இருப்பதைப் பார்த்து, அர்ச்சனா குரலை உயர்த்தி அடுத்த rapidfire round என்றதும் ரோஹிணிக்கு அப்பாடி நல்ல வேளை இப்போது யோசித்துக் கஷ்டப்பட வேண்டாம் என்று நினைத்தாள். ஆனால், ரெஹானா கேள்வி முதலில் அம்மாக்களுக்கு , அப்புறம் தான் அப்பாவுக்கு என்றதும் இது இன்னும் முடியவில்லை என்று தெரிந்தது.

முதல் கேள்வி – உங்களது superannuation –இல் எவ்வளவு இருக்கு என்று எப்போ பார்த்தீர்கள் என்று ரோஹிணியை பார்த்து முதலில் கேட்டாள்.

ரோஹிணிக்கு , ஏனோ, அர்ச்சனாவை தினமும் எழுப்பிவிடும் போது தான் பாடும் அர்ச்சனைகளை மனுசுல வைத்துக்கொண்டு தன்னை பழி வாங்குவது போலவே தோன்றியது. ராமை பார்த்து எவ்வளவு இருக்கு பா என்று கேட்டவுடன் , அர்ச்சனா நோ , நீங்கள் எப்போ பார்த்தீர்கள் என்று கேட்டவுடன், எல்லாம் அப்பாவுக்கு தான் தெரியும் என்று கொஞ்சம் பலமாக கூறினாள். அர்ச்சனாவுக்கு அவள் அம்மாவின் நிலமை புரிந்து ,மீனாவை பார்த்து அத்தை, நீங்க சொல்லுங்க என்றாள்.

மீனாவிற்கு அவள் பெயரில் ஆரம்பித்து ஆனால் அடிக்கடி பணம் போடாமல் இருக்கும் superannuation கணக்கு பற்றித் தெரியாது என்று ராஜ் சொன்னதும் மீனாவிற்குக் கோபம் வந்து அவரை பார்த்து ஒரு முறை முறைத்ததும் , ராஜாவிற்குத் தான் செய்துள்ள தவற்றை உணர்ந்து தலையைக் குனிந்து கொண்டார்.

ஜெரீனாவிற்கு ரஹ்மானின் தொகை தெரியும் ஆனால் தன் பெயரில் ரஹ்மான் ஒரு கணக்கு தொடங்க முடியும் என்பது தெரியாமல் நாம் அடுத்தவருக்கு அறிவுரை சொல்லிக் கொண்டிருக்கிறோம் என்பதை நினைத்து அவளுக்கும் கொஞ்சம் அவள் மேலேயே கோபம் வந்தது.

ராஜா தவற்றை உணர்ந்ததை போல், ராமும் எப்பொழுதும் கூட்டுக் கணக்கில் இரண்டு பேரின் தொகையைக் கணக்கு பார்த்து எதிர்காலத்தை யோசித்தவர், அர்ச்சனா எந்த வயதில் எவ்வளவு சேமித்து வைப்பாள் என்று கணக்கு பார்த்தவர், ரோஹிணிக்காக யோசிக்காததை நினைத்து நிறையவே மனசுக்குள் குறுகினார். ரெஹ்மானோ எப்பொழுதும் போல், இதுவும் ஜெரீனா பொறுப்பு என்று சாதாரணமாக நினைத்துக் கொண்டார்.

அடுத்த கேள்வி – உங்கள் செலவுக்கு எவ்வளவு தேவை படும் என்று தெரியுமா? அந்த செலவிற்கு, அப்பாவின் பங்களிப்பு இல்லாமல், அதாவது, அவர்கள் இல்லாத காலத்தில், அவர்களது நாமினேஷன் மூலம் வரும் பணத்தை கணக்கு எடுக்காமல் உங்களுக்கு எந்த வகையில் பணம் வரும் என்று தெரியுமா.

இதற்க்கு ரெண்டு பதிலை கணக்கில் எடுத்துக்கொள்ளக்கூடாது.

ஒன்று, எங்களை எதிர்பார்க்க மாட்டீர்கள் என்று அடிக்கடி சொல்லுவீர்கள், அதனால் எங்களை இந்த கேள்வியிலிருந்து எடுத்து விடுங்கள் என்று சந்தடி சாக்கில் அவர்கள் நிலையை நாசுக்காகச் சொல்லிவிட்டு அடுத்ததாக, இந்தியா–விற்கு திரும்பிப் போகும் பதிலும் இதற்கு கிடையாது என்று கேள்வியை முடித்தாள்.

மீண்டும் மூன்று அம்மாக்களும் பதில் இல்லாமல் தங்கள் கோபத்தை, இயலாமையை அப்பாக்களிடம் காண்பித்து, எப்போதாவது இப்படி யோசித்ததுண்டா என்று ஒன்று போல் கேட்டார்கள். அப்பாக்களும் பதில் இல்லாமல் அமைதி காத்தார்கள்.

கடைசி கேள்வி, ஆனால் வேறு தலைப்பில் என்று கீதா ஆரம்பித்தாள். பல வகையில் சொந்த நாட்டை விட இங்கு உங்களுக்கு நிறைய வசதிகள், வாய்ப்புகள் இருக்கின்றது என்று அடிக்கடி சொல்லுவீர்கள், ஆனால் உங்களுக்கு என்று உங்கள் மனசுக்கு, உடலுக்கு, சந்தோஷத்துக்கு என்று ஏதாவது செய்திருக்கின்றீர்களா . அதாவது, உங்கள் comfort zoneக்கு வெளியே வந்து எதாவது முயற்சி பண்ணி இருக்கின்றீர்களா ? ராம் மாமா அவரது 52வது வயதில் 1500cc மோட்டார் பைக் வாங்கி இருக்கிறார் , ரெஹ்மான் மாமா இது வரைக்கும் 7 முறை பாய்ஸ் அதாவது ஓல்ட் பாய்ஸ் ட்ரிப் போயிட்டு வந்திருக்கிறார் , அப்பா எல்லா மாடல் காரையும் வாங்கி ஓட்டி பார்த்துவிட்டார். இப்போ நீங்கள் சொல்லுங்கள் என்றாள்.

ரோஹிணி உடனே, தான் சனிக்கிழமை தோறும் 1000 ஸ்டெப்ஸ் strangers குரூப் கூட நடைப்பயிற்சி போய் தனக்கு என்று செலவிடும் அந்த நேரத்தை நிறையச் சந்தோசமாகச் சொன்னதும், yes அத்தை I'm proud of you என்று அவளைக் கட்டிப்பிடித்து ஒரு முத்தம் கொடுத்தாள் கீதா.

மீனாவிற்கு யோசிக்க யோசிக்கக் கோபம் தான் கூடியது. இவர் வருடா வருடம் ஒரு முதலீடு பண்ணுவார், அதைப் பார்த்துக் கொள்ளவே நேரம் போதாது , இதில் எனக்கு என்று நான் செய்துகொள்ளுவது அம்மா வீட்டுக்குப் போய் ஒரு வாரம் ஒன்றும் செய்யாமல் சாப்பிட்டுத் தூங்குவது மட்டும் தான்.

ஜெரீனாவிற்கு ரெஹ்மானை சேர்த்து மூன்று குழந்தைகளைப் பார்த்துக் கொள்ளவே நேரம் பற்றவில்லை என்று குறை கூறினாலும், மனசுக்குள், அது காரணம் இல்லை என்றே தோன்றியது.

சரி உங்களுடைய முறை இப்போது , என்று அப்பாக்களைப் பார்த்து அர்ச்சனா திரும்பினாள்.

முதல் கேள்வி அப்பாவுக்கு என்று ராமைப் பார்த்து, எங்களுக்கு என்று தனியாகச் சேமிப்பு கணக்கு, எதிர்கால திட்டம் என்று யோசித்த நீங்கள், ஏன் அம்மாவுக்குத் தனியாகக் கணக்கோ, எதிர்கால திட்டமோ யோசிக்கவில்லை, அவர்களை ஏன் எப்பொழுதும் உங்கள் நாமினியாகவே மட்டும் கருதுகிறீர்கள் ன்று சிறிய புன்முறுவலோடு கேட்டாள். தன்னை ஒரு முற்போக்கு சிந்தனையாளராக நினைத்திருந்த ராமுக்குப் பின்னந்தலையில் பளீரென்று யாரோ அறைந்ததுபோல் இருந்தது.

நீங்கள் இல்லாதபோது என்று யோசித்து எங்களுக்காக உயில் எழுதத் தோன்றும்போது, அம்மாவுக்கு என்று ஏன் தனியாக யோசிக்கத் தோன்றவில்லை என்று மற்றுமொரு கேள்விக் கணையை அவரை பார்த்துக் கேட்டாள். அதுவரைக்கும், ரோஹிணிக்காக, ரெஹ்மானுக்காக என்று உதவிக்கரம் நீட்டிப் பதில் அளித்த ராமுக்கு இப்பொழுது யாராவது அவருக்கு உதவிக்கரம் நீட்ட மாட்டார்களா என்றிருந்தது.

அர்ச்சனா கிட்டத்தட்ட, கோர்ட் சூட் போடாத கோபிநாத்தாக மாறியிருந்தாள்

அடுத்து ராஜா மாமா என்று அவரை பார்த்து, உங்களுக்கு அப்புறம் அத்தைக்கு என்றுதான் சொல்லுகிறீர்கள் , ஆனால் அத்தைக்குத் தனியாக வருமானம் வரும்படி ஏன் முதலீடு எதுவும் செய்யவில்லை? என்று அதே புன்முறுவலோடு ஆனால் குரலில் அழுத்தம் மாறாமல் கேட்டாள்.

ராம் என்ன சொல்லுவது என்று தெரியாமல் திகைத்துப் போனாலும், அர்ச்சனாவின் கேள்வியிலிருந்த உண்மையான முற்போக்கு சிந்தனையை உணர்ந்து உள்மனத்தில் பூரிப்படைந்து உட்கார்ந்திருந்தார்.

கையிலிருந்த போன்-ஐ மேஜை மேல் போட்டுவிட்டு, எழுந்து வந்து அர்ச்சனாவின் தோளோடு அணைத்து ரொம்ப நன்றி என்று மனதார பாராட்டி வேறு எந்த பதிலும் சொல்ல முடியாமல் தன்னிடத்தில் போய் ஒரு பெரும் மூச்சு விட்டு உட்கார்ந்தார் ராஜா.

தன்னிடம் கேள்வி கேட்காததை நினைத்து ஒரு சந்தோசத்துடன் எனக்கு குலோப் ஜாமூனுக்கு ஐஸ் கிரீம் எடுத்துட்டு வாமா என்று கீதாவிடம் கேட்டுக் கொண்டிருந்தார் ரெஹ்மான்.

தங்களுக்காக ஒரு பெரும் வழக்கை வாதாடி வெற்றிபெற்று கொடுத்த பெரும் வழக்கறிஞராக அர்ச்சனாவைப் பார்த்து மூன்று அம்மாக்களும் அவள் முகத்தை கைகளால் சுற்றி தங்கள் நெற்றிப் பொட்டில் நெட்டி உடைத்து பெருமைப் பட்டார்கள். மீனா அர்ச்சனா மற்றும் ரெஹானா, கீதாவைப் பார்த்து எப்படி இந்த கேள்வி எல்லாம் தோன்றியது என்று ஆர்வமாகக் கேட்டாள்.

அர்ச்சனா அவளைப் பார்த்து, எங்கள் வேலையில் போன வாரம் வெளியிட்ட ஒரு

அறிக்கையில், இங்குள்ள இடம்பெயர்ந்து வந்துள்ள மக்கள் தொகையில் உள்ள பெண்களை நான்கு விதமாகப் பிரித்துள்ளார்கள். முதலில், கட்டாயத்தினாலோ இல்லை விருப்பத்தினாலோ தன்னையும் தன் குடும்பத்தையும் தனி ஆளாக இருந்து பார்த்துக் கொள்ளுபவர்கள். இரண்டாவதாக பெரிய பதவியில் இருப்பவர்கள்.

மூன்றாவதாக குடும்பத்தின் முதன்மை பொறுப்பாளர் ஆக இருப்பவர்கள் கடைசியாக எங்களைப் போன்ற Gen -Z வகை பெண்கள்.

இதில், முதலில் உள்ளவர்கள் அவர்களது பொருளாதாரத்தை நன்று அறிந்தவர்களாக உள்ளார்கள். அடுத்தபடியாக பெரிய பதவியில் இருப்பவர்கள்,நிதி ஆலோசகரை வைத்து தங்கள் பொருளாதாரத்தைப் பார்த்துக் கொள்ளுகிறார்கள். Gen -Z வகை, வெறும் சேமிப்பு என்று மட்டும் இல்லாமல் முதலீடு மூலம் எவ்வளவு சீக்கிரம் finfree அடைய முடியும் என்று யோசிக்கும் அளவிற்கு உள்ளார்கள். ஆனால் இந்த care taker குரூப் அதாவது உங்களைப் போன்றவர்கள் பெரும்பாலும் குடும்ப பொருளாதாரத்தில் திறமை கொண்டிருந்தாலும் தனிப்பட்ட பொருளாதாரத்தில் மிகவும் பின்னால் உள்ளதாகக் கணக்கெடுப்பு கூறுகிறது . அதனால் தான் இந்த கேள்விகள் இன்று என்று சொல்லி அவர்களைக் கட்டிப் பிடித்து சாமாதானப் படுத்தினாள்.

அவள் சமாதானப் படுத்தினாலும், அவளது கேள்விகள் வெளிச்சம் போட்டுக் காட்டிய தங்களுக்கு என்று இல்லாத ஒரு எதிர்காலத்தை நினைத்து ஒருவித பதற்றத்தை உள்ளுக்குள் உருவாகுவதை மூவரும் உணர்ந்தனர்.

இவ்வளவு காலங்கள் குடும்ப நிதிக்கு உழைத்த தாங்கள், தனக்கு என்று நேரத்தையோ, முக்கியமாக தங்களது எதிர்கால நிதி நிலைமை என்று ஒன்றைப் பற்றி யோசிக்காமலே இருந்துள்ளோம் என்ற நினைப்பு அந்த பதற்றத்தை மேலும் கூட்ட, நாளைக்கு உணவுக்கு யாருக்கு எல்லாம் takeaway வேண்டும் என்று கேட்டு வேகமாகச் சமையலறைக்குள் தஞ்சம் அடைந்தனர்.

அர்ச்சனா , ரெஹானா கீதாவைப் பார்த்து ஐ think they too had some takeaway from this, என்று சந்தோசத்துடன் கண்ணைச் சிமிட்டி அவளது கணினியை மூடினாள்.



# பாரதியாரின் பன்முகங்களில் பெண் விடுதலை

“பெண்ணின் பெருந்தக்க யாவுள” என்கிறார் திருவள்ளுவர்

இவ்வுலகில் பெண்ணை விட பெரியது எது? பெண்ணைவிட பெரியது எதுவுமே இல்லை என்கிறார் திருவள்ளுவர். இதன் காரணம் “கற்பெனும் திண்மை உண்டாகப் பெறின்”

இங்கு கற்பு என்பது உடலை சார்ந்த விடையம் அல்ல. இது மனதைச் சார்ந்த விடையமாகும். கற்பு ஒரு பெண்ணின் திண்மையைக் குறிக்கின்றது என்பதை இந்த சமுதாயத்திற்கு மீண்டும் வலியுறுத்தியவர் பாரதியார். கற்பு எனும் சொல் வலிமையை, உறுதியை, திடத்தன்மையை, கடினதன்மையை, கம்பீரத்தை குறிக்கின்றது.



அபிதாரணி
சந்திரன்

பாரதியார் ஒரு ஆணாக, ஒரு பிராமணராக, மேலாதிக்க சமூகத்தைச் சேர்ந்த ஒருவராக எப்படி பெண் விடுதலையை ஆதரித்தார்? பாரதியார் ஆரம்பம்முதலே பெண்விடுதலையை முன்னிறுத்திய ஒருவரல்ல. காலங்கள் கழிய, அறிவும் அனுபவமும் மேலோங்க பெண்கள் ஆண்களுக்கு நிகராக நடத்தப்படுவதில்லை என்பதை உணர்ந்தார். பிற்காலங்களில் சமூகத்தின் பிற்போக்குத்தனத்திற்கு எதிராகப் போராடினார். அக்காலத்தில் பெண்களுக்கு வாக்களிப்பு உரிமைகள் வழங்கப் படவில்லை, குழந்தை திருமணங்கள் நடைபெற்றன, உடன் கட்டை ஏறுதல், மாதவிடாய் கட்டமைப்புகள் இருந்தன. ஆண்களுக்கு கீழ் இருப்பது, அவர்களுக்கு பரிமாறுவதும், சேவை செய்வதுமே

ஒரு பெண்ணின் வாழ்க்கையின் பிரதான அர்த்தமாக இருந்தது.

பாரதியாரின் உணர்ச்சிகளை பாடல்கள் மற்றும் கவிதைகள் மூலம், பிற்போக்கான ஆணாதிக்க சமூகத்திற்கு புகுத்த முயற்சித்தார். பெண்கள் விடுதலை அடைய எப்படி செயற்படவேண்டும் என்பதை வலியுறுத்தினார். பல புரட்சிப் பெண்களும் புதுமைப் பெண்களும் அவரது ஆதரவால் உருவாகினார்கள்.

"அச்சம் மடம் நாணம் பயிர்ப்பு" எனும் கட்டமைப்புகள் தொன்று தொட்டு, காலம் காலமாக மருவி வந்து, பெண்கள் இப்படித்தான் இருக்கவேண்டும் என்ற இலக்கணத்தையும், வரையறையையும் ஆணாதிக்க சமூகம் வைத்திருந்த போது, அதைப் புறக்கணிக்கும் வகையில்

"நாணும் அச்சமும் நாய்க்குட் வேண்டுமாம், ஞான நல்லறம் வீர சுதந்திரம் பேணு நற்குடிப் பெண்ணின் குணங்களாம்" என்றார் பாரதியார்.

இதன் மூலம், பெண் விடுதலையை நடைமுறையில் எப்படி சாத்தியப் படுத்த முடியும் என பாரதியார் உணர்த்துகிறார்.

"நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்
திமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால்
செம்மை மாதர் திறம்புவ தில்லையாம்"

என்கிறார்

பெண்கள் நிமிர்ந்த நன்னடையும் நேர்கொண்ட பார்வையும், யாருக்கும் பயப்படாமல், கம்பீரமாக நெஞ்சில் துணிவுடன், தைரியத்துடன் தாமாக இயங்கவேண்டும் என்கிறார்

"சாத்திரங்கள் பலபல கற்பராம்
சவுரியங்கள் பல பல செய்வராம்
மூத்த பொய்மைகள் யாவும் அழிப்பராம்
மூடக் கட்டுக்கள் யாவும் அழிப்பராம்"

வேதம் சாத்திரம், அறிவியலைக் கற்று எது உண்மை, எது பொய், எது பெண்களை சம்பிரதாயம் என்ற பெயரில், ஒடுக்கிவைக்கிறது என்பதை உணர்ந்து, அவற்றை உடைத்தெறிய வேண்டும் என்று உற்சாகப்படுத்துகிறார் பாரதியார். மாதவிடாய் என்றால் தீட்டு, சமையல் கட்டுக்குள், கோவிலுக்குள், சாமியறைக்குள் செல்லக் கூடாது என்று சொல்வதெல்லாம் அடக்குமுறையின் மறைமுகம் தான்.

பாரதியார் கண்ட கனவுகள் பல நனவாகிவிட்டன.

"பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்" எத்தனையோ சோதனைகள் கடந்து சாதனைகள் படைக்கும் பெண்களைப் பற்றி கேள்விப் பட்டு வருகின்றோம். அவற்றில் பாதிக் கணக்கான பிரச்சனைகள் எமது சமூகத்திலுள்ள ஆண்களினாலே இருக்கின்றது என்பதையும் நாம் அறிவோம்.

"ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்
அறிவிலோங்கி இவ்வையம் தழைக்குமாம்
பூணு நல்லறத் தேடிங்குப் பெண்ணுருப்
போந்து நிற்பது தாய் சிவ சக்தியாம்"

பெண் உருவத்தில் தோன்றி நிற்பது தாய் சிவ சக்தியாம். காக்கும் கடவுளுக்கு நிகராக பெண்ணை கருதிகிறார் பாரதியார். இங்கும் அவரது கனவு நனவாகிவிட்டது.

ஒரு காலத்தில் களமாடி, துப்பாக்கிகளை ஏந்தி எமது மக்களை காத்தவர்களில் பலரும் பெண்கள்தான்.

"அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே

இச்சகத்திலுள்ளோரெல்லாம் எதிர்த்து நின்ற போதிலும்

அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே

துச்சமாக எண்ணி நம்மை தூறு செய்தபோதிலும்

அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப

தில்லையே

பிச்சை வாங்கி உண்ணும் வாழ்க்கை பெற்றுவிட்ட போதிலும்

அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே

இச்சை கொண்ட பொருளெல்லாம் இழந்து விட்ட போதிலும்

அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே

இச்சகத்திலுள்ளோரெல்லாம் எதிர்த்து நின்ற போதிலும், அதாவது ஒன்பது நாடுகள் சேர்ந்து எதிர்த்து நின்ற போதிலும் அச்சமின்றிப் போராடிய பெண்களை நாங்கள் மறக்க முடியுமா.

துச்சமாக எண்ணி நம்மை தூறு செய்தபோதிலும், இலங்கை அரசாங்கம் எமது மக்களின் மனித உரிமையைக் கூட மதிக்காமல், மனிதாபிமானமற்ற முறையில் நடந்து கொண்ட போதிலும் எம்மை தைரியத்துடன் காத்தவர்கள் இந்த பெண்களும் தான்.

பிச்சை வாங்கி உண்ணும் வாழ்க்கை கூட எங்களுக்கு இருக்கவில்லை, உணவுக்கும் மருந்துக்கும் பிச்சை கூட எடுக்க முடியாத போதிலும் எம்மை அச்சமின்றி காத்தவர்கள் இவர்கள்.

அனைத்தும் பாரதியார் விதைத்த விதை தான். அவர் கொடுத்த திண்மை, தைரியம், நெஞ்செழுத்தம் தான் இங்கு அடித்தளமாக இருக்கின்றது. பெண்கள் எப்பொழுதும் இச் சமுதாயத்திற்கு ஒரு எடுகோலாக, ஆளுமையும் ஆற்றலும் தைரியமும் மிக்கவர்களாக இருந்துகொண்டேதான் இருக்கின்றார்கள்.

ஆகவே பாரதியாரின் பெண் விடுதலை உணர்வு தலைமுறைகள் தாண்டியும் மேலோங்கி நிற்கிறது. அவர் இட்ட விதைகளில் வளர்ந்து வரும் பெண்களில் நானும் ஒருத்தி தான்.

# "எதற்காக"



ஆவூரான்

பையிலே காசு இல்லாத போது
கையிலே பாசத்தோடு அலைந்தோம்
பையிலே காசு வந்த போது
மனத்திலே கனத்தோடு நடக்கிறோம்

சட்டியில் சோறு குழைத்து
கையில் ஏந்தி உண்ட நாம்
சிறு சட்டிகளாய் பிரிந்து சோறு
இருந்தும் உண்ணாது தவிக்கிறோம்

ஒரு வீட்டில் ஒரு பாயில்
ஒரு போர்வைக்குள் உறங்கிய நாம்
தனி வீடு தனி அறை தனிப் படுக்கை
என்றாகிப் பிரிந்து உறக்கம் தேடுகிறோம்

தேசியம் தேடி ஓடிய நாளில்
சாவும் சகதியும் அருகருகில்
யார் பிணம் என்றும் அறியாது புதைத்தோம்
சாதி இரண்டு என்றாகி நின்றோம்

கூடிக் குடித்தோம் கஞ்சி
கூடிப் படுத்தோம் தரை விரிப்பில்
கூடி நின்றோம் முள்வேலியினுள்

இன்று....
பிச்சுப் போட்ட
ரொட்டித் துண்டுகளாய்
பூஞ்சணம் பிடித்து கிடக்கின்றோம்.
எதற்காக?

# Census 2026

Tuesday, August 11th, 2026, is a very important day for all Australians, not just for citizens, but for everyone who lives in or is visiting this wonderful country. It is one of the key days when you get to help the government to decide how they need to plan, where they need to focus, and what they need to deliver. It is Census Day. Missing the Census will have its consequences. It will cost us, everyone around us and potentially our future generations. All this is based on a few key questions on that online form, yes, they have gone online this time.

I'm sure that by now you would have received at least ten WhatsApp messages or Facebook posts asking you to answer two important questions in the Census online form; what language you speak at home and what your ancestry is. You might have wondered, or even thought, that these organisations are keen on promoting the Tamil language and its heritage through these campaigns. You may be right that might be one of their goals, but even without realising it, they are helping you and the government in better ways.

Have you ever wondered why some critical information on health, law, and community services is written in multiple languages, but still not in the language your first generation parents or grandparents would benefit from? For example, imagine your grandparents visiting you from overseas and forgetting to tick an important part of the disembarkation form. What they face next could be a heart-wrenching experience at the mercy of government officers who take their role very seriously. I'm not saying your grandparents won't be able to speak English, but they would certainly prefer to explain in their mother tongue why they brought that home medicine, which is a cure for their daughter's pregnancy pain.

Translation services are one of the biggest beneficiaries of your answer to the 'language spoken at home' question. Yes, you may be the third generation of your family who never speaks your mother tongue or your parents' mother tongue and that's okay. But when you answer that question, think about your grandparents or even your own parents in their retirement years, living in a village, who would love to talk to someone who can understand and reply in their language.

On the same note, the ancestry question is not about holding its place in a forgetting world. It is important data for the health department to plan community-level interventions, which even to a lesser extent still benefit third-generation communities.

Even if you're not speaking your ancestry language and don't identify with that ancestry, it is essential that you answer these questions correctly, not just for you, but for your community's benefit. And yes, it will also ensure your language and ancestry are noted by government policymakers when they write up their plans.

One of the best use cases you can read about from the ABS is how Casey Council libraries voluntarily proposed a section for Punjabi literature based solely on the 2021 Census data, which had Punjabi in the top-ten languages table. Imagine how beneficial it would be for the community to have similar services across health, law, and transport.

# மக்கள் தொகை கணக்கெடுப்பு 2026

ஆகஸ்ட் 11 செவ்வாய், ஆஸ்திரேலியா மக்களுக்கு மிக முக்கியமான நாள். குடியுரிமை பெற்ற மக்கள் மட்டுமின்றி, இங்கு வாழும் அனைத்து தரப்பினரும் இந்த ஒரு நாள் மூலம், ஆஸ்திரேலியா அரசு எந்த வகையில், யாருக்கு , எந்தவிதமான நலத் திட்டங்களை செயற்படுத்த வேண்டும் என்று எடுத்துரைக்க வாய்ப்பளிக்கும் நாள். அது 2026 –ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பு நாள்.

இக்கணக்கெடுப்பை தவிர்த்தாலோ, அல்லது சில முக்கியமான கேள்விகளுக்கு சரியான பதிலை பதிவு செய்யாவிட்டாலோ, அது நம்மை மட்டும் அன்றி, நம்மை சார்ந்தவர்களுக்கும், நமது எதிர்கால சந்ததியினருக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். இன்னுமொரு முக்கிய தகவல், இந்த முறை அனைவரும் இணையவழியில் தான் பதிவு செய்யவேண்டும்.

இந்த பதிப்பினை நீங்கள் படிக்கும் முன், உங்களுக்கு அந்நாளைப்பற்றியும், அதில், 1) வீட்டில் ஆங்கிலத்திற்குப் பின், அதிகமாகப் பேசப்படும் மொழி என்ன, 2) உங்களது பூர்வீகம் / வம்சாவளி / வழிமரபு என்ன என்ற இரு முக்கிய கேள்விகள் அதற்க்கு எந்த வகையில் பதில் அளிக்க வேண்டும், அதனால் என்ன பயன் என்பதையும் குறுஞ்செய்தியாகவோ, மின்னஞ்சல் வழியாகவோ தகவல்கள் கண்டிப்பாக வந்திருக்கும்.

அந்த தகவல்கள் மூலம் தமிழையும் அதன் மரபையும் முன்னிலைப் படுத்துவதாக தெரிந்தாலும், அதன் மூலம் பெரிய பயன் அடைவது நீங்களும், இந்த அரசாங்கமும் தான்.

இன்று நீங்கள் பல முக்கிய இடங்களில் , அதாவது மருத்துவமனை, நீதி மன்றங்கள், போக்குவரத்து போன்ற துறைகளில், பல மொழிகளில் முக்கிய தகவல்கள் மொழி பெயர்ப்பில் எழுதி இருப்பதைக் கண்டிருப்பீர்கள் ஆனாலும் உங்களது முதல் தலை முறையினரோ, அல்லது உங்களது தாத்தா பாட்டிகளுக்கு தெரிந்த மொழியில் இல்லாமல் இருப்பது ஏன் என்று யோசித்துள்ளீர்களா?. உதாரணத்துக்கு, உங்களை பார்க்க உங்கள் நாட்டில் இருந்து வரும் பாட்டி , ஆங்கில படிவத்தில் முக்கியமான கேள்விக்கு சரியான பதிலை தேர்வு செய்யாமல், அதனால் குடிவரவு அதிகாரியின் குறுக்கு விசாரணையில் படும் பாட்டை யோசித்துப்பாருங்கள். அவர்களுக்கு ஆங்கிலம் தெரியாது என்று சொல்லவில்லை, ஆனால், கொண்டு வந்துள்ள கைவைத்திய மருந்து அவர்களுடைய பேத்தியின் பிரவசத்துக்கு என்பதை தங்கள் தாய் மொழியில் சொல்ல வாய்ப்பிருந்தால் நன்றாக இருக்கும் அல்லவா.

மொழிபெயர்ப்பாளர்கள் துறை தான், வீட்டில் ஆங்கிலத்துக்கு அடுத்து பேசப்படும் மொழி என்ற முதல் கேள்விக்குரிய பதிலால் அதிகம் பயன்படும் துறை. நீங்கள் மூன்றாம் தலைமுறையினராக , வீட்டில் அதிகம் தாய் மொழியில் பேசாதவராக இருக்கலாம் , ஆனால், இந்த கேள்விக்கு பதில் அளிக்கும் பொழுது உங்கள் பெற்றோர்களின் முதுமை காலத்தில் அவர்கள் இருக்கும் இடத்தில, அவர்களது தாய் மொழியில் பேசக்கூடிய சூழ்நிலையில் இருக்கவே ஆசை படுவார்கள்.

அதே போல் உங்கள் பூர்விகத்தை பற்றிய பதில், வேகமாக பல இனங்களை இழந்து வரும் இந்த உலகத்தில் அதன் இடத்தை நிலைப்படுத்துவதற்கான கேள்விக்கானது இல்லை, அந்த பதில் மூலம் தான் சுகாதாரத்துறை அச்சமுதாயத்துக்குரிய

தேவையான உடல்நல திட்டங்களை திட்டமிடுகிறது.

நீங்கள் தாய் மொழியை பேசவில்லை என்றாலும், அல்லது பூர்வீக அடையாளத்தை கொள்ளாதவர் என்றாலும், இந்த கேள்விகளுக்கு சரியான பதில் அளிப்பதில் மூலம் உங்கள் சமுதாயத்திற்கு நீங்கள் செய்யும் ஒரு சிறந்த செயலாகும். ஆம், இந்த மூலம், இந்த அரசாங்கம் அதன் திட்டங்களை வகுக்கும் பொழுது, உங்களது மொழியையும், உங்கள சமுதாயத்தின் பூர்வீகத்தையும் கணக்கில் கொள்ளும்.

இந்த பதில்களின் சிறந்த பலனை அறிந்து கொள்ளவேண்டும் என்றால், ஆஸ்திரேலியா மக்கள் தொகை கணக்கெடுப்பு இணையதளத்தில் உள்ள கேசி கவுன்சில் நூலக உதாரணத்தை படித்து பார்க்கவும். எந்த ஒரு விண்ணப்பமும் இல்லாமல், முழுவதுமாக 2021 ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் தகவலை கொண்டு, கேசி நூலகத்தில் , அதிகம் பேசப்படும் முதல் பத்து மொழிகள் என்ற அட்டவணையில் இடம்பெற்றிருந்த இந்திய மொழி பஞ்சாபிக்கு தனியாக ஒரு வாசிப்பு பகுதியினை ஏற்படுத்தியுள்ளார்கள். யோசித்து பாருங்கள் , இதைப் போல மருத்துவம், சட்டம், போக்குவரத்து மற்றும் முக்கிய துறையில் நம் சமுதாயத்திற்கும், அதன் மொழிக்கும் இடம் இருந்தால் எவ்வளவு நான்றாக இருக்கும். ஆகவே ஆகஸ்ட் 11 ஆம் தேதி மக்கள் தொகை கணக்கெடுப்பில் பங்கெடுத்து உங்கள் கடமையை சரியான பதில்கள் மூலம் சமுதாயத்திற்கும் அதன் மொழிக்கும் பலன் சேருங்கள்.



# வரையறைகளைத் தாண்டி

சாந்தி சிவகுமார்

கடந்த சில ஆண்டுகளாக, இளவேனில் குழு சமூக இதழை வெளியிடும் பணியுடன், நமது சமூகத்தினருக்கிடையே சிந்தனையூட்டும் உரையாடல்களையும் தொடர்ந்து உருவாக்கி வருகிறது. இளவேனில் சஞ்சிகையில் ஆழமாகப் பகிரப்படும் கருத்துகளின் இயல்பான தொடர்ச்சியாகவே இவ்வாறான கலந்துரையாடல்களை நாம் வடிவமைத்து வருகின்றோம்.

அத்தகைய முயற்சிகளின் இன்னொரு அர்த்தமுள்ள படியாகவே 'வரையறைகளைத் தாண்டி' (Beyond the Stereotype) என்ற நிகழ்வு அமைந்தது.

இளவேனில் சஞ்சிகையின் ஆசிரியர்களில் ஒருவரான தாமரை மதியழகன் ஒருங்கிணைத்த இந்த நிகழ்வில் சமந்தா இரத்தினம், ரஷான், திவ்யா மஹேன், விதூஷா துஷியந்தன் மற்றும் கிரென் ஜோன் பிரிட்டோ ஆகியோர் கலந்துகொண்டனர்.

சமந்தா சமூகநீதியையும் கொள்கை அரசியலையும் முன்னிறுத்தி இயங்கும் அரசியல் செயற்பாட்டாளர். ரஷான், தான் சார்ந்த சமூகமும் பாலினமும் அரிதாகவே தெரிவுசெய்யும் பரதநாட்டியத்தில் உறுதியுடன் தனது இடத்தை உருவாக்கியவர். திவ்யா மஹேன், விக்டோரிய மாநில மகளிர் கிரிக்கெட் அணியின் வீராங்கனை. விதூஷா துஷியந்தன், விக்டோரிய மாநில காவல்துறையில் பணியாற்றுபவர். கிரென் ஜோன் பிரிட்டோ, அமேசான் நிறுவனத்தின் அவுஸ்திரேலிய விநியோகச் சேவையின் தலைவராகப் பணியாற்றுகிறார்.

இவர்கள் அனைவரும் நமது சமூகத்தின் திறமையாளர்கள் மட்டுமல்ல; புதிய பாதைகளைத் திறந்த முன்னோடிகளும் ஆவர். வழமையாக நமது சமூகத்தினர் அதிகம் பயணிக்காத துறைகளில் தங்கள் தடத்தைப் பதித்து, அத்தகைய துறைகளில் பயணிக்க விரும்பும் அடுத்த தலைமுறைக்கு முன்மாதிரிகளாகத் திகழ்கிறார்கள்.

சமூகத்தில் நிலவும் முன்முடிவுகள், பொதுப்புத்திகள் மற்றும் அடையாளங்களின் குறுகிய வரையறைகளைக் கடந்து, மனிதர்களின் உண்மையான திறன்களையும் அனுபவங்களையும் புரிந்துகொள்வதற்கான அர்த்தமுள்ள முயற்சியாகவே 'Beyond the Stereotype' நிகழ்வு வடிவமைக்கப்பட்டது.

இந்த நிகழ்விற்கான சிறு பொறியாக அமைந்தது, பதினான்கு வயதான அன்ஷ்ருதா தனது கிரிக்கெட் பயணத்தைப் பற்றியெழுதிய ஒரு கட்டுரை. அந்தக் கட்டுரை எழுப்பிய சிந்தனைகளே, சமூகத்தின் வரையறைகளையும்

எதிர்பார்ப்புகளையும் பற்றிய விரிவான உரையாடலுக்கு வழிவகுத்தன.

மருத்துவத் துறையையும் கிரிக்கெட்டையும் எவ்வாறு சமநிலைப்படுத்துகிறீர்கள் என்று கிரிக்கெட் வீராங்கனை திவ்யாவிடம் கேட்கப்பட்டபோது, அவர் அளித்த பதில் மிகவும் ஆழமானதாக இருந்தது. "உண்மையாகவே ஒரு விஷயத்தை நேசித்தால், அதற்கான நேரத்தையும் வாய்ப்பையும் நாமே உருவாக்கிக் கொள்வோம்" என்ற அவரது கருத்து, இந்த உரையாடலின் முக்கியமான செய்திகளில் ஒன்றாக அமைந்தது.

இந்தக் கருத்தை சமந்தாவும் வலியுறுத்தினார். வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கு ஒன்றைத் தேர்ந்தெடுத்து மற்றொன்றை முழுமையாகக் கைவிட

ஆடைகள், ஆபரணங்கள், அரங்கேற்றங்கள் போன்றவற்றைச் சுற்றி உருவாக்கப்பட்டிருக்கும் தேவையற்ற எதிர்பார்ப்புகளே, இந்தக் கலை மிகவும் செலவு மிகுந்தது என்ற எண்ணத்தை உருவாக்கியுள்ளன.கலை வடிவமே தடையாக உள்ளதா, அல்லது அதைச் சுற்றி நாம் உருவாக்கியுள்ள நடைமுறைகளும் பார்வைகளும்தான் தடையாக உள்ளனவா என்ற கேள்வியையும் இது எழுப்புகிறது.

தனது ஆண் சகாக்கள் குறித்துக் கேட்கப்பட்டபோது, கிரென் பகிர்ந்த அனுபவம் மிகவும் நேர்மறையானதாக இருந்தது. தனது தாத்தா, தந்தை மற்றும் பணியிடத்தில் உள்ள ஆண் சக ஊழியர்கள் அனைவரும் தனக்கு மிகுந்த ஆதரவாக இருந்ததாக அவர் கூறினார்.



வேண்டிய அவசியமில்லை. தெளிவான முன்னுரிமைகள், நல்ல திட்டமிடல் மற்றும் அர்ப்பணிப்புடன், ஒருவரால் தனது கல்வி, தொழில் மற்றும் ஆர்வங்களை இணைத்துப் பயணிக்க முடியும்.

பாரம்பரியக் கலைகளைக் கற்பது செலவு மிகுந்ததா என்ற கேள்விக்கு பரதநாட்டிய ஆசிரியர் ரஷான், இல்லை. கலை வடிவம் தானாகவே செலவு மிகுந்ததல்ல; அதை நாம் அப்படியாக மாற்றியிருக்கிறோம்.

நடன ஆசிரியரின் இந்தப் பதில், இன்றைய சூழலில் மிகவும் அவசியமான ஒரு சிந்தனையை முன்வைக்கிறது.

ஒரு கலை வடிவத்தின் மதிப்பு, அதற்காக செலவிடப்படும் பணத்தில் இல்லை; அதை கற்கும் ஆர்வம், ஒழுக்கம், அர்ப்பணிப்பு மற்றும் தொடர்ச்சியான பயிற்சியில்தான் இருக்கிறது.

மேலும், "நாம் சொல்ல வேண்டிய விஷயங்களைச் சரியான முறையில், தெளிவாக எடுத்துரைத்தால், நமக்குத் தேவையான ஆதரவைப் பெற முடியும்" என்ற அவரது கருத்து இந்த உரையாடலில் முக்கியமான ஒரு செய்தியாக அமைந்தது.

மேலும், இந்த உரையாடல் முழுவதும் மீண்டும் மீண்டும் வெளிப்பட்ட முக்கியமான கருத்து என்னவென்றால், இன்றைய Gen Z தலைமுறையினர் தங்களுடைய சிந்தனையிலும் எதிர்காலக் கனவுகளிலும் மிகவும் தெளிவாக இருக்கிறார்கள். அவர்கள் என்ன விரும்புகிறார்கள், எந்தப் பாதையில் பயணிக்க விரும்புகிறார்கள் என்பதை நன்கு அறிந்திருக்கிறார்கள்.

இளம் காவல்துறை அதிகாரியான விதுஷா இதை மிக அழகாகச் சுட்டிக்காட்டினார்: பதினேழு வயதிலேயே ஒரு குழந்தை தனது

வாழ்நாள் முழுவதற்குமான முடிவை எடுக்க வேண்டிய அவசியமில்லை. அவர்கள் தங்கள் எண்ணங்களை மாற்றிக்கொள்வதும், புதிய பாதையைத் தேர்ந்தெடுப்பதும் முற்றிலும் இயல்பானதே.ஒவ்வொரு தலைமுறையும் தாங்கள் வாழும் காலத்தின் அனுபவங்கள், தகவல்கள் மற்றும் வாய்ப்புகளின் அடிப்படையில் வளர்கின்றன. பெற்றோர்கள் தங்களுடைய அனுபவத்தின் மூலம் வழிகாட்டுகிறார்கள் அதே நேரத்தில் இன்றைய இளைஞர்கள் புதிய தொழில்கள், கல்வி வாய்ப்புகள், தொழில்நுட்பம் மற்றும் உலகளாவிய அனுபவங்கள் மூலம் வேறுபட்ட பார்வையைக் கொண்டிருக்கிறார்கள். பெற்றோர்கள் இதை திறந்த மனதுடன் ஏற்றுக்கொள்ள வேண்டும். பிள்ளைகளின் விருப்பங்கள், கனவுகள் மற்றும் வாழ்க்கைப் பாதைகள் காலத்திற்கேற்ப மாறக்கூடும் என்பதைப் புரிந்துகொண்டு, அவர்களின் தேர்வுகளுக்குத் துணைநிற்பதே அவர்களுக்கு அளிக்கக்கூடிய மிகப் பெரிய ஆதரவாகும்.

பல்வேறு பின்னணிகளைச் சேர்ந்த சமூக உறுப்பினர்களை ஒரே தளத்தில் ஒன்றிணைத்த இந்த நிகழ்வு, கருத்துப் பகிர்வு, அனுபவப் பரிமாற்றம் மற்றும் சிந்தனையைத் தூண்டும் உரையாடல்களின் மூலம் புரிதல், பரஸ்பர மரியாதை மற்றும் ஒற்றுமையின் அவசியத்தை வலியுறுத்தியது. கேள்விகள் எத்தனை பிற்போக்குத்தனமாக இருந்தாலும் முகம் சுளிக்காது இளையவர்கள் நிதானமாகவும் தீர்க்கமாகவும் பதில் அளித்தது பெரும் நம்பிக்கையையும் நிறைவையும் கொடுத்தது.

இந்த உரையாடலும், சமூகத்தின் வழமையான வரையறைகளைத் தாண்டி புதிய பாதைகளைத் தேடி பயணிக்க முனையும் அனைவருக்கும் ஊக்கமாக அமையும் என்றும், அவர்களின் பயணத்தை சிறிதளவாவது இலகுவாக்கும் என்றும் நாங்கள் நம்புகிறோம்.

# Oru Selaiyin Payanam

*(Story from Magazine 29)*

Hello Shanthi, what an apt title for your heartwarming story – Oru Selaiyin Payanam.

Payanam….journey….yes. Mallika and you truly took me on this emotional roller-coaster journey when I read the story. It is a journey that, in many ways, I feel will continue for as long as I live.

And it is this feeling that compelled me to write to you. I wanted to let you know that your story had a profound impact on me, Shanthi. I read it several times and with each reading, I discovered something new or found myself reliving a memory.

Like Mallika, saris hold a deeply sentimental place in my life. As I read the story, Mallika made me pause and reflect on these questions - Who am I? Where did I come from? What defines my culture? How traditional or contemporary are my choices? Shanthi, through your words, I connected my saris to the people, to moments of celebration and to cherished and painful memories in my life.

I shared your story with a few friends who, like Mallika and me, are also on their own sari journeys. Shanthi, they responded with the same mix of emotions – nostalgia and reflection. Mallika's journey sparked new conversations amongst us and paved the way for deeper reflection and the emotional role that saris play in our life.

Do you see where I am getting at Shanthi? Mallika, you, me, my friends – we are all women in our fifties, navigating experiences that are reshaping our lives now. We are learning and trying our best to embrace this phase as the "new me" and adapting to the "new normal" with greater awareness and acceptance.

Shanthi, as the story unfolded, one question kept returning to me – how can six yards of a fabric hold so many emotions? I found myself deeply confused, Shanthi. Was it Mallika's emotions triggering something within me, or was it the beautiful description of saris that connected me to both the past and present? I cannot quite decide till today.

When Mallika chose to "let go" of her saris, I felt her pain and helplessness. When she spoke about her memories associated with some saris, I shared her happiness and satisfaction. And when Mallika made the difficulty yet thoughtful decision to sell some of her saris, I truly understood her strength and resolve.

And here are some thoughts that continue to stay with me, Shanthi.

-I wished that a male figure came into the store at some point.

-Saris hold power. The Gulabi Gang is a great example - a group of woman in India, wearing bright pink sarees, actively fighting domestic abuse and advocating for themselves, proving that the sari is a symbol of strength and collective power.

-Saris can be a burden. When I see women engaged in physical labour - construction workers, farmers or shop assistants in India, the sari seems uncomfortable and woman wear a shirt, just to feel secure and confident.

- A sari speaks emotions and is an extension of feelings – when a woman is angry, the pallu and pleats are lifted and gets tucked in on a side, when she is sad, it is used to wipe away her tears; when she is happy, she wears her favourite-coloured saree.

-Should there be rules to clothe oneself? Woman can wear shirts and pants, yet men wearing saris freely is still uncommon.

Thank you so much, Shanthi, for this emotional and truly timeless sari story. As long as saris exist, new stories will continue to emerge and these stories will live on because every sari is a story.

Oru Selaiyin Payanam…. thodargirathu…. thodarum.

With love,

Paru.



# முதுமையை அரவணைப்போம்



சியாமளா
சோமசுந்தரஐயர்

இளமைக்காலத்தில் சிறகடித்து பறந்த எண்ணங்களுடன் வாழ்ந்த நாம் இன்று முதுமையை அடைந்தவுடன் மனம் சோர்வது சகஜமாகிவிட்டது. இன்று இதைப் பலரிடமும் காண முடிகிறது.

குழந்தை வாலிபம் முதுமை இவை அனைத்துமே மனிதராகப் பிறந்த எமக்கு இறைவனால் வழங்கப்பட்ட பருவகாலங்கள் ஆகும். இளமையிலும் வாலிபப் பருவத்திலும் சிறகடித்துப் பறந்த எம் மனம் முதுமையில் சோர்வடையக் காரணமே நாம்தான். நோய் காரணமாகவும் வயது காரணமாகவும் உடல் சோர்வடையலாம். ஆனால் மனதை உறுதியாகவும் மகிழ்வாகவும் வைத்திருப்பது எமது பொறுப்பாகும்.

முதுமைக்காலத்தில் எம்மால் அதிக வேலைகள் செய்ய முடியாது. நமது அன்றாட வேலைகளை யார் உதவியும் இல்லாமல் நாமே செய்வது நமக்கு சிறந்த உடற்பயிற்சியாகவும் பொழுதுபோக்காகவும் அமைவது மட்டுமல்ல பெரிய மனத்திருப்தியையும் ஏற்படுத்துகின்றது.

என் மூத்த சகோதரி, பிறந்ததிலிருந்தே மிகவும் பலவீனமானவள். 78 வயதாகிவிட்டது. கண்பார்வை, சிறுநீரகம், இதயம் சுவாசப்பை சமிப்பாட்டு உறுப்பு அனைத்துமே செயற்பாட்டைக் குறைத்து விட்டன. இதையெல்லாம் பற்றி அவள் கவலைப்படுவதே இல்லை. இருக்கும் காலம்வரை மகிழ்வாக வாழவேண்டும் என்பதே அவள் எண்ணம். சிறுவயதில் கற்ற தையல், பின்னல் வேலைகளில் ஈடுபடுதல், நண்பிகளுடன் பேசுதல், தொலைக்காட்சி பார்த்தல் இவையெல்லாம் அவள் பொழுதுபோக்கு. நோயையும் முதுமையையும் பாரமாக எண்ணாது எல்லாம் இறைவன் செயல் என தன் இஷ்ட தெய்வமான வைரவரை நம்பி வாழ்க்கையை இனிதே வாழ்கிறாள்.

மனம் போல் வாழ்க்கை என்றனர் முன்னோர். நாம் எல்லோருமே நிம்மதியாகவும் சந்தோஷ மாகவும் வாழப் பழக வேண்டும். இளமையில் நாம்

பல துறைகளிலும் ஈடுபட்டிருக்கின்றோம். யாருக்கு எதில் ஈடுபாடு ஏற்படுகிறதோ அதை ஆர்வத்துடன் கற்றுக்கொள்கிறோம். அக்கலைகளே முதுமையில் நமக்கு சிறந்த பொழுதுபோக்காக அமைகின்றன. மனதுக்குப் பிடித்த பொழுதுபோக்குகளில் ஈடுபடும்போது இன்பத்திற்கு அளவே இல்லை. இது நடைமுறையில் நான் அறிந்த உண்மை.

காலம்செல்ல மேலும் முதுமையில் உடல் நலிவடையும் போது, எம்மை நாமே பார்த்துக்கொள்ள இயலாதபோது, எம்மைச் சரியான முறையில் பராமரிக்கும் இடமாக முதியோர் இல்லங்கள் இருக்கின்றன. இவற்றில் ஒன்றைத் தெரிவு செய்து நமது மீதிக் காலத்தை ஆனந்தமாகக் கழிக்க வேண்டும். எமது வாழ்க்கையைத் தீர்மானிப்பது நாமே.

என் நண்பி தொன்னூற்றி இரண்டு வயதில் ஒரு இல்லத்தில் வாழ்கிறாள். நேரம் தவறாது சாப்பாடு, மருந்துகள் கிடைக்கிறது. நேரம் போவது தெரியாமல் நல்ல பொழுதுபோக்குகள், உடற்பயிற்சி, விளையாட்டுகள் என்று அனைத்தையும் மகிழ்ச்சியாக அனுபவிக்கிறாள். பிடித்த சில சாப்பாடுகளை மகள் அடிக்கடி செய்துகொண்டுபோய்க் கொடுக்கிறார். யமன் வரும்போது ஆறுதலாக வரட்டும் என்று நிம்மதியாக வாழ்கிறாள்.

முதியோர் இல்லங்களில் எம் வயதொத்தவர்களுடன் வாழும் வாழ்க்கை நமக்கு மகிழ்வைத் தரும். நேரம் தவறாது எமக்குரிய மருந்து உணவு பொழுதுபோக்குகள் என நமக்கு கிடைக்கும். நம்மைப் போன்ற பலருடனும் உரையாடும் போது நமக்கு நேரம் செல்வதே தெரியாது.

இதைவிடுத்து பிள்ளைகள் எம்மைப் பராமரிக்கவில்லையே என ஆதங்கப்படுவது மூடத்தனம் என்றே எனக்குத் தோன்றுகிறது. நான்தானே உன்னை பெற்று வளர்த்தேன். என் முதுமைக் காலத்தில் நீதானே என்னைப் பார்க்க வேண்டும் என எதிர்பார்ப்பதும் மடைமையே. இது எழுதப்பட்ட சட்டம் அல்லவே.

இதுபோல ஒருசில பிள்ளைகளும் பெற்றோரை முதியோர் இல்லங்களுக்கு அனுப்புவது கொடிய பாவம் என கருதுகிறார்கள். இது தவறான கருத்தாகும். பெற்றோர் உடல் நலிவு பெற்று தம்மைத் தாமே கவனிக்க இயலாத நிலை வந்தபோதும் தமது கொள்கையை விட்டுக் கொடுக்காமல் இருந்தால் அதுவே பாவமாக அமைகிறது. தனிமையில் வாழும் வாழ்வை விடவும், பிள்ளைகளில் தங்கி வாழும் நிலையைவிடவும் இல்லங்களில் வாழ்வது நிம்மதியையும் மகிழ்வையுமே தரும்.

குழந்தைப் பருவத்தில் நாம் பிள்ளைகளை டேக் கேர் சென்று விட்டோம் அல்லவா. குழந்தைகள் தம் வயதினரோடு சேர்ந்து பழக வேண்டும், தம் வேலைகளை கற்றுக் கொள்ள வேண்டும், சந்தோஷமாகப் பொழுதைப் போக்க வேண்டும் என்னும் காரணங்களுக்காகத்தானே சேர்க்கிறோம். அவர்களும் ஒருங்கிணைந்து வாழ்கிறார்கள்தானே. இது எல்லாமே அன்பு அக்கறையின் நிமித்தமே செய்யப்படுகின்றது. இதுபோலத்தான் முதியோர் இல்லங்களும் . அவர்களை வசதியாக பாதுகாப்பாக வாழ வைப்பதே நோக்கமாகும்.

முதுமை எப்போதும் இனிமையே ஆகும். முதியோரின் மனதில் சுமைகள் இல்லை. எமக்கு பொறுப்புகள் இல்லை. நேரக்கட்டுப்பாடுகள் இல்லை. வானில் சிறகடித்துப் பறக்கும் பறவைகள் போல மனதை இலேசாக வைத்திருக்க முடியும். இவ்வாறிருந்தால் முதுமை வரமாக அமையும். நாம் வாழும் காலத்தை என்றும் மகிழ்வுடன் வாழ்வோம்.

# நிழல்களின் இரவு - ஸம்ராவின் படைப்புகள்

**கவிதைகள் - ஸம்ரா**
**தொகுப்பு - ஜேகே**



மெல்பேர்னின் புற நகரத்துக் குளிர் இரவு அது. Bad Decisions எனும் பெயர் கொண்ட ஒரு மதுபான இரவு விடுதியின் மேல் தளத்தில் அந்த நிகழ்ச்சி ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. இருபதுக்கு முப்பது அடிகள் கொண்ட அறைக்குள்ளே குறு மேடை போடப்பட்ட அரங்கில்தான் நிகழ்வு. இருபது பேர் கூடக்கூடிய அந்த அறைக்குள் எண்பது பேரளவில் நெருங்கி நின்றிருந்தார்கள். ஒலிபெருக்கியில் ரொக், மெட்டல்வகை இசைக்கோர்வைகள் கட்டடத்தையே அதிரவைத்துக்கொண்டிருந்தன. அந்த இரவின் நிகழ்வுக்கு 'Night of the disenfranchised' என்று பெயர் வைத்திருந்தார்கள். அதிகம் அறியப்படாத, திறமை வாய்ந்த இசைக்கலைஞர்கள் ஒன்றன் பின் ஒன்றாக அன்றிரவு அரங்கேறினார்கள். ஆதாரமாக ரொக் இசை அமைய, அதிலிருந்து தம் மரபுசார்ந்து சில புதுமைகளை அத்தனை கலைஞர்களும் செய்தார்கள். அவற்றுள் ஒன்றாக பிரண்ணே, ஸம்ரா, தாஃலியா இணைந்த குழுவினரது நிகழ்ச்சியும் அரங்கேறியது. ரொக் இசையும் கர்நாடக இசையும் கலந்து புதிதான ஒரு பாணியை அறியும் முயற்சி அது. முப்பது நிமிடங்கள்வரை நீடித்த அவர்களது நிகழ்வில் ஓரிடத்தில் மிகப் பலமாக மின்சார கிற்றார் கருவி ஆர்ப்பரித்து அடங்க, திடீரென ஸம்ராவின் குரலில் தமிழ்ப்பாடல் ஒன்று ஒலிக்க ஆரம்பித்தது.

நதிக் கரையினிலே மரங்களைப்போல
நான் நிழலானேன் உன் அருகினிலே
நதிக் கரைகளுக்கும் மரங்கள் தேவை
அது உயிரினம்தான், வெறும் நிழல் அல்ல
நீ அறியாயோ.

பிரிவின் வலியை, புறக்கணிப்பின் வலியை இசையின் ஓசை நயத்துக்கிடையே மொழியில் கடத்தவேண்டும். நதி ஓடிக்கொண்டேயிருக்கிறது. தன் பயணத்தின் இரு மருங்கிலும் தழைத்து நிற்கும் மரஞ்செடிகளுக்கு அதுதான் ஆதாரமும்கூட. ஆனால் நதி அந்த மரங்களுக்காகத் தன் ஓட்டத்தை சற்றேனும் நிறுத்துவதில்லை. நிதானித்து, அதனோடு பேசி உறவாடுவதில்லை. மரம் அங்கே கரையிலேயே நிற்க, அதற்கு உயிர் கொடுத்த நதி எங்கோ கடலைத்தேடி ஓடிக்கொண்டேயிருக்கிறது.

ஸம்ராவுக்கு தமிழில் நன்றாகப் பரிச்சயம்




உண்டு. ஆனால் அவருடைய சிந்தனை மொழி தமிழ் அல்ல. சில ஆண்டுகளுக்கு முன் இளவேனிலில் அவர் எழுதிய ‘Long walk to emancipation’ - the struggles of the cursed generation என்ற கட்டுரை, புலம்பெயர்ந்த இரண்டாம் தலைமுறையினரின் முக்கிய குரலாக என்றும் கவனிக்கப்படவேண்டியது. இசையிலும் பல மொழிகளிலும் திறன் வாய்ந்த ஸம்ராவின் பல நிகழ்வுகள் பிட்ஸ்ரோய், பிரன்ஸ்விக், நகரமையம் எனப் பல அரங்குகளில் தொடர்ந்து இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. நவீன, மேலைத்தேய இசையோடு தன்னுடைய ஆதாரமான கர்நாடக சங்கீதத்தையும் ஸம்ராவின் அவருடைய கோர்வைகள் புதிய வடிவங்களைத் தேடிக்கொண்டேயிருக்கின்றன. ஸம்ராவோடு இசை சார்ந்தும் கவிதைகள் சார்ந்தும் உரையாடும் பொழுதுகள் ஆழமானவை. அவருடைய பாடல்கள், கவிதைகள், சிறு கட்டுரைகள் பலவற்றில் ஒரு குறிப்பிட்ட சிந்தனை மறுபடியும் மறுபடியும் வந்து கொண்டேயிருப்பதை அவதானிக்கலாம்.

ஓடும் நதியை விசித்து நின்று பார்க்கும் மரத்தினது சிந்தனை அது.

‘The last time I felt loved was in 1993’ என்று ஆரம்பிக்கும் ஸம்ராவின் இன்னொரு கவிதையின் ஆதாரச் செய்தியும் அதுதான். நான் கடைசியாக அன்பினை உணர்ந்தது கருவில் இருக்கும்போது எனும் வரிகள் கொடுக்கும் அதிர்ச்சியிலிருந்து மீள்வது கடினமானது.

The last time I felt loved was in 1993
I was not born then.
The notion of conceiving me was joyful.
And hopeful.
For them

I was not yet born then.

A foetus was forming in the womb.
They said, foetus.
There were belly rubs, singing, prayers and meditation to the unborn.
They were buying cute little clothes to decorate and adorn the foetus.

The last time I felt loved was in 1993
I was not born then.
Building a cradle
Assembling a crib
Buying a car seat
Collecting cute clothes

Anticipation, excitement, hope, joy, and some fear.
For them
The last time I felt loved was 1993
I was not born then.

கரைதனில் நிற்கும் மரத்தின் விதையை நதியே மலையினின்று காவி வந்திருக்கும். அது எங்கே விதைக்கப்படவேண்டும் என்பதையும் நதியே தீர்மானிக்கிறது. அதற்கு நீரூற்றுகிறது. பசளை பாய்ச்சுகிறது. ஆனால் அது முளை விட்டு வளர்வதைப் பார்க்க அந்த நதி காத்திருப்பதில்லை. மற்றவருக்கு நதி அங்கேயே நிற்பதுபோலத் தோன்றலாம்.

ஆனால் அந்த மரமோ அதன் விதையைக் காவி வந்த நதியை இன்னமும் தேடிக்கொண்டிருக்கிறது.

பாழும் மனம் பகலுக்கும் இரவுக்குமிடையில் கிடந்து தவிப்பதை ஸம்ராவின் பிறிதொரு கவிதை பேசுகிறது.

An ugly night, then a beautiful day.
Cloudy gloom then sunshine came to stay.
Is the dark dread gone?
Is it here to stay?
Neurons dance about in a trance,
Then the body curls up in dismay.
Rest, de- stress, this will go away.
An ugly night, then a beautiful day.
Raindrops then rumble, electric storms,
Tears then wailing, thoughts of impending doom.
Rain rain go away,
Come by later, maybe some other day?

Darkness, moonshine, the night becomes silent.



Sedated by sorrows, this is just the way
The darkness is kissed and sent away by
the dawn of a new day.

இருளை முத்தமிட்டு வழியனுப்புகிறது பகல் என்னும் வரிகளில் இருள் மறுபடியும் வந்துசேரும் என்னும் நினைப்பும் தொக்கி நிற்கிறதல்லவா? துயரத்தில் மயங்கிக்கிடக்கும் மனதுக்கு இரவும் பகலும் ஒன்றென்றே எண்ணத்தோன்றுகிறது. இப்போது கவிதை பகலுக்குள் நகர்கிறது. பறவைகள் கீச்சிடுகின்றன. மரங்கள் காற்றோடு சேர்ந்து நடனமாட, அதன் இலைகள் உதிர்ந்து விழுகின்றன. மரம் நிர்வாணமாகிறது. மறுபடியும் துளிர்க்கிறது. இரவைத் துடைத்த பகலில் இவையெல்லாமே கவிதைக்குத் தெரியவருகிறது.

Birds chirping, trees dancing, with the wind,
they sway.
An ugly night, then a beautiful day.
Leaves fall with the weeping winds,
Bare bones, skeletons of trees.
(The) grass grows, petals pop up,
Sap trickles down the trunks of trees.
Autumn or Winter, Spring or Summer,
Nature always breaks free.

Ugly nights will eventually turn into
beautiful days.
The Sun will shine bright, sometimes it does,
So just do as they say.

Take a breath of fresh air,
smell the flowers,
before they all wither away.
How many are left?
They're not meant to last anyway
With all that has gone or is going.
May sorrows too be swept away.

Until then,
Just do as they say
Follow the clichés,
and just seize the day.

நம்பிக்கைதான் வாழ்க்கை என்று எந்த நம்பிக்கையில் இக்கவிதைக்கு எடுத்துரைப்பது? அறிவுரைகளைக் கேளுங்கள். எல்லோரையும்போல வாழுங்கள். எந்நாளும் உன் நாளே என்றால் செவிமடுங்கள் என்று ஏளனம் செய்யும் கவிதையை எப்படித் தேற்றுவது? எந்த அலையாலும் கரையில் கிளிஞ்சல்கள்போலத் தங்கிவிடும் சோகங்களை அடித்துச்செல்லமுடியுமா என்ன? கிளிஞ்சல்கள் தோன்றுவதே அலைகளால்தாம் அல்லவா? பதிலுரைக்க அல்ல கவிதை. உணர்தலே கவிதையாம்.

ஸம்ராவின் My Pet எனும் கவிப்பத்தி தன்னையே தனிப்பெருந்துணையாக உருவகிக்கும் தனித்தோர் மனதை விளக்குகிறது.

My Pet

A red, velvety sheen, wavering with the wind's ways, shimmered in the sunlight,covered by a dark coat. It stood proudly, wearing my blouse and denim jacket on its head, its button-like eyes mischievously looking to grab my gaze, accompanied by a grin, its golden grills glistening cheekily.

Are you wearing my clothes again?

I giggled and asked. It was showing off its unique sense of style, with a suitable selection from my wardrobe collection. I watched it adorn itself with my floral scarf next, as I set to change into my trackies upon returning home from a brunch date. Mumbling to myself laying in bed, I complained about the super salty smashed avo and stale sourdough I spent my savings on. It stood there silently right by my side. I had mistakenly assumed my need for solitude when I really did need its solidarity. I confided in it, continuing to complain.

Dinner time approached, and I was determined to shake off the bitterness from brunch. After devouring a homemade delicacy,I sweetened my palette with dessert before getting ready for bed.

You're still here, and still wearing my clothes. I wonder if you ever get tired.

I changed into my pyjamas, encouraging it to add my trackies to its existing ensemble. The whooshing noise of the wind was as though ghosts were circling the vicinity. I awoke many times that night, and to my comfort stood my trusted chair, clothed in my garb, carrying the burden of my closet.

இவ்வகை உள்ளங்களுக்கு என ஒரு கனவு இருக்கும். அந்தக் கனவில் அவர்கள் உலகைத் தம் கரிசனையாலும் அன்பினாலும் நிரப்புவார்கள். அங்கே தனித்தோர் யாவரும் அரவணைக்கப்படுவர். பிறிதின் நோய் தன் நோய்போல் போற்றும் பண்பு அவர்கட்குண்டு. அந்தக் கனவுலகில் நதி மரத்தை அரவணைத்துக்கொண்டு ஓடாது அவ்விடத்திலேயே உறைந்துவிட்டிருக்கும். அங்கு இரவு நிழல்கள் உயிர்பெறச் சிறு வெளிச்சத்தை விட்டுவைக்கும்.

ஸம்ராவின் இந்தக் கவிதையில் அந்தக் கனவு கொஞ்சம் உண்டு.

I wish to plant a thousand seeds
watch them sprout and watch them grow
Nourish them with the help of the Sun
in the hope that they rise, steady and slow
Only a hundred of them may thrive
Some more may survive
But only a bunch may stay alive

இது ஒரு தற்செயலான, உயிரினத்தின் பிழைத்தலைச் சொல்லும் கவிதை அல்ல. மாறாக இக்கவிதை தான் விதைக்கும் ஒவ்வொரு விதையின் மீதும் தன் கரிசனையைப் பொழிகிறது. அவற்றுள் சிலது முளைத்தும், பிழைத்தும் வாழும்போது உயிர்த்தெழாத விதைகளின்மீது காட்டும் அன்பு இக் கவிதையின் எழுதப்படாத வரிகளுக்குள்ளே புதைந்திருக்கிறதல்லவா?

நதிக்கரை வாழ் மரங்களிடமிருந்து கிடைக்கும் அன்பு அது.




# 217 km

**இமாம்**

LAP 1

சீட் மீண்டும் நழுவியது.

ஏதோ சரியில்லை. உடம்பும் மூளையும் சைக்கிள் ஓடும்போது ஒருநிலைக்கு வரும். ஆனால் இன்றைக்குச் சைக்கிள் ஓடத் தொடங்கியதிலிருந்தே ஏதோ ஒரு பிரச்சனை. உடல் எடை சைக்கிளின் திசையை மாற்றியது. கால்களால் தொடர்ந்து அதே பிடிப்பைக் கொடுக்க முடியாமல் போனது. நன்கு உணரமுடிந்தது. ஆனால் என்ன பிழை என்றுதான் தெரியாது.

“மீண்டுமா” என்று எரிச்சலுடன் சைக்கிளை ஓரம் கட்டினேன். கால் ஊகித்ததை விடவும் பலமாகச் சாலையோரமான சரளைக் கற்களில் மோதியது. மூளையில் கொதித்துக்கொண்டிருந்த எரிச்சல் கால் விரலின் நோவிற்குள் பாய்ந்தது. அதே வேகத்தில் கெட்டவார்த்தைகளும் உதயமானது.

217km சைக்கிள் ஓட்டப் பந்தயத்தில் 20km தூரம்தான் கடந்திருக்கிறேன். அதற்குள் இரண்டு முறை சைக்கிளை நிறுத்தியாச்சு. இப்போதைக்கு என் குழுவினர் என்னைவிட்டு வெகுதூரம் சென்றிருப்பார்கள். ஒவ்வொரு முறை நிறுத்தும் போதும் பந்தயம் என்னை விட்டு நழுவி செல்லுது. சீட் clampஐ இறுக்கினேன். இரண்டு முறை சரிபார்த்தேன். வண்டியில் ஏறி ஓட்டத் தொடங்கினேன்.

5 km தூரம் கடந்ததும் மீண்டும் சீட் சரிந்தது. இந்த முறை எந்த கெட்டவார்த்தையும் வரவில்லை. அதில் எந்தப் பயனும் இல்லை. சைக்கிளை உற்றுப் பார்த்தேன். சாலையை உற்றுப் பார்த்தேன். போட்டி முடிவதற்குள் இன்னும் எத்தனை முறை இதைச் செய்ய வேண்டியிருக்கும்? இந்த வேகத்தில் போனால்

எப்பிடியோ 7 மணித்தியாலத்தில் முடிக்க முடியாது. அப்ப ஏன் இவ்வளவு மெனக்கெட வேனும்? அப்போது எனக்குப் பின்னால் ஒரு சைக்கிள், மணிச் சத்தத்தோடு வந்து நின்றது.

“சீட்போஸ்டா?” என்ற குரல் கேட்க நிமிர்ந்து பார்த்தேன். இன்னொரு வெள்ளைக்கார சைக்கிள் ஓட்டுநர்.

நான் தலையசைத்தேன்.

“என்ன சீட் நிற்கவில்லையா?” என்றபடி தன் பையிலிருந்து ஒரு multi-toolஐ எடுத்துக் கொண்டு, என் சைக்கிள் அருகில் வந்து நின்றார்.

நாங்கள் இருவரும் வார்த்தைகளை வீணாக்கவில்லை. நான் நகர்ந்து வழிவிட்டேன். அவர் சைக்கிள் clampஐ தளர்த்தி, தன் சட்டைப்பையிலிருந்து ஒரு துணியை எடுத்து எல்லாவற்றையும் துடைத்தார். அவர் சரி செய்யவதை பார்க்கவே விஷயம் தெரிந்த ஆள் என்று தோன்றியது. அவர் மீண்டும் சரிபார்த்து சமநிலையில் வைத்து clampஐ இறுக்கினார்.

“இப்போது ஏறிப் பாருங்கள்...”

நான் ஒரு காலைத் தூக்கிப் போட்டேன். அமர்ந்தேன். அழுத்தினேன். எதுவும் அசையவில்லை. அவர் ஒருமுறை தலையசைத்தார். ”சரியாகத்தான் இருக்கும்” என்று சொல்லிக்கொண்டே தன் சைக்கிளில் ஏறி எந்த நன்றியும் வாங்காமல் பறக்கத்தொடங்கினர். சாலையில் அவர் மறைந்து போவதைப் பார்த்தவாறே சைக்கிளை மிதிக்கத் தொடங்கினேன்.

அன்று முதல் முறையாகச் சைக்கிள் இயல்பாக இருந்தது. எனக்கு முன்னால் சாலை விரிந்து இருந்தது. கண்ணுக்கு எட்டிய தூரத்தில் ஒருவரும் இல்லை. என் குழுவினர் தூரமாகப் போய்விட்டனர். ஏற்கெனவே 30 km பின்தங்கிவிட்டேன். அந்த உணர்வு பரிச்சயமானதாக இருந்தது. மிகவும் பரிச்சயமானதாக. நான் திட்டமிடாத ஒன்றைச் சமாளித்துக்கொண்டு நிற்க, வாழ்க்கை என்னைவிட்டு எவ்வளவோ முன்னே நகர்ந்துவிட்டது. ஆனால் நான் இன்னும் ஆசுவாசமா போய்க்கொண்டு இருக்கிறேன். நாளடைவில் அந்தத் தொய்வே பழக்கமாய் விட்டது. என்னோடு தொடங்கியவர்கள் எல்லாம் எங்கோ போய் விட்டார்கள், நான் இன்னும் இங்கேயே நிற்கிறேன். விட்டுச் சென்றவர்களைத் துரத்திப் பிடிப்பதில் என்ன இருக்கு? இல்லை பிடிக்கத்தான் முடியுமா? பேசாமல் இந்தச் சைக்கிள் பிரச்சனையில் பழியைப் போட்டுவிட்டு இத்தோட இந்தப் போட்டியை முடித்து விடலாம். யாரும் ஒன்றும் கேட்க மாட்டார்கள். நானும் தோற்றதாக இருக்காது. அதுதான் சரியாக இருக்கும்.

ஒரு பெரும் மூச்சுடன் என் பாரத்தை முழுமையாகச் சைக்கிள் சீட்ல் போட்டேன். சீட் சரியவில்லை, பதிலுக்கு அது என்னைக் குத்தியது.

முன்னர் இழந்த ஒவ்வொரு நிமிடமும் சைக்கிளுக்குச் சொந்தமாக இருந்தது. சீட் பிரச்சனை சரிசெய்யப்பட்டுவிட்டதால் அவை இப்போது எனக்குச் சொந்தமானது. இப்படி யோசித்து, நான் யோசித்தது சரி என்று மனதை நம்பவைத்து, நல்லா தொடங்கிய வாழ்க்கையின் நடுவில் வந்த ஒரு தொய்வையே பழக்கமாகி 50 வருடங்களைக் கடத்திவிட்டேன். அது வேண்டாம் என்றுதான் சைக்கிள் ஓடத் தொடங்கினேன். அங்கேயும் வந்து இப்படியா யோசிப்பேன்? சைக்கிளில் ஒரு பிழையும் இல்லை, கண்ணுக்கெட்டிய தூரம் பாதை தெளிவாக இருக்கிறது, நான் செய்யவேண்டியது ஒன்றே ஒன்றுதான், இந்தச் சைக்கிளை எவ்வளவு முடியுமோ அவ்வளவு வேகமாக ஓட்டவேண்டும். வெறும் முயற்சி மட்டுமே.

அப்போது உண்மையாகவே bum நொந்தது. இந்தச் சின்ன சீட்டில் இந்த பெரிய bumஐ எவ்வளவு நேரம்தான் வைத்திருக்க முடியும்? சீட்டிலிருந்து எழுந்து மிதிக்கத் தொடங்கினேன். வேகமா மிதித்தேன், மிக வேகமாக மிதித்தேன். அந்த மூலை வரும் வரையில், சைக்கிளும் பாதையும் மட்டுமே மூளையில்



இருந்தது. அந்த மூலையில் நான் முந்தப் போகும் முதல் சைக்கிள் ஓட்டுநர் கண்ணில்பட்டார். உற்சாகத்தோடு மிதித்தேன். கடக்கும்போதே, அவர் எனக்கு உதவி செய்த நபர் எனத் தெரிந்து. என்னிடம் இருந்து வாங்காமல் சென்ற நன்றியே கூறிய படியே அவரை தாண்டிச் சென்றேன். கடன் சுமை நீங்கியதால் மிதிக்க இலகுவாக இருந்தது, வேகமா மிதித்தேன். கண்ணில்படும் ஓட்டுநரை எல்லாம் இரை தேடும் விலங்கு போல விரட்டிப் பிடித்தேன். இதை ஒரு விளையாட்டாக மாற்றி துரத்துவதற்குச் சைக்கிள் ஓட்டுநர் இல்லாதபோது, கங்காருக்களைத் துரத்தினேன்.

யூக்கலிப்டஸ் மரங்களும், சாலையோரப் புதர்களும், அதிலிருந்து திடீரெனத் தோன்றிய கங்காருக்களும் நான் ஆஸ்திரேலியாவில் இருக்கிறேன் என ஞாபகப்படுத்தின. என் வாழ்நாளில் தாய் நாட்டில் வாழ்ந்ததை விட அதிகக் காலத்தை ஆஸ்திரேலியாவிலேயே கழித்திருந்தேன். இருப்பினும் ஒவ்வொரு முறை கங்காரு கண்ணில்படும் போதும் ஒருவிதமான மகிழ்ச்சி. என் மகள் இந்த இடத்தில் இருந்திருந்தால், அப்பா நீங்கள் மட்டும் இல்ல பெரும்பாலான ஆண்களுக்கு மகிழ்ச்சி, சோகம், கோபம் இதைத் தவிர அவர்களின் உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் வார்த்தைகள் தெரியாது, என்று வகுப்பு எடுத்திருப்பா. இங்கே பிறந்த பிள்ளைகள் வேற எப்படி கதைப்பினம். அது எல்லாம் அவ uni போகும் மட்டுந்தான். இப்ப அப்படி வகுப்பு எடுக்கக் கூடி நேரம் இல்லை. நேரம் இல்லாமலும் இல்ல. பின் ஏன் இந்த இடைவெளி? எங்களுக்குள்ள கதைக்க ஒரு பொதுவான விஷயமும் இல்லையா?

சைக்கிள் ஓட்டுதலில் உள்ள விசித்திரம் என்னவென்றால், சாலைகள் மாறும், நிலக்காட்சிகள் மாறும், ஆனாலும், இன்னும் நூறு கிலோமீட்டர்கள் சென்றால் விடை கிடைக்கும் என்று நம்பிய கேள்விகள் மட்டும் இன்னும் அங்கேயே இருக்கும். எந்தக் கேள்விகளிலிருந்து தப்பி ஓட முயன்றேனோ, அவற்றோடு தனிமையில் விட்டுவிடும். கேள்விகள் மூளையை குடைய, வலி காலை குடைந்தது. ஆனாலும், தூரத்தில் எதோ பழுப்பு நிறமாகத் தெரியும் வரை நான் எதையும் துரத்துவதை நிறுத்தவில்லை. சிறிது அருகில் செல்லத் தெரிந்தது வெள்ளையர்கள் ஆதிக்கம் செலுத்திய சைக்கிள் போட்டியில் பரிச்சயமான என் குழுவினரில் ஒருவர். அவரை கண்டதும் ஒரு சந்தோசம். என் குழுவினரைப் பிடித்ததால் அல்ல, நான் விட்டதைப் பிடித்ததால் வந்த பெருமிதம்.

## LAP 2

எந்தக் குழுவிலும் எப்படியாவது ஒரு நபர் கடைசியாக வருவார். அவரும் அப்படித்தான். மனிதர்களுக்கான உரையாடல் முக்கியமே தவிர, என்ன உரையாடுகிறோம் என்பதல்ல. பேச்சுத்துணைக்கு ஒருத்தர் கிடைத்தார் என்று ஏதேதோ பேசிக்கொண்டே முதல் தரிப்பிடத்தை அடைந்தோம்.

எங்களைக் கண்டதும், இளைப்பாறிய நண்பர் குழு "Good work", "Well done" என ஆர்ப்பரித்தது. நான் னசமைெள, உணவு, toilet என்று எல்லாவற்றையும் கெதியாக முடித்துவிட்டு அவர்களின் அரட்டையிலும் இணைய முடிந்தது.

முதலில் ஒருவர் தொடங்கினர், “ஓம்... இவர் எப்பிடியும் வந்துவிடுவார் என்று நாங்கள் நினைச்சம், ஆனால் உங்களை எதிர்ப்பாக்கவே இல்லை”. மற்றவர்களும் ஆமோதிக்கும் விதமாகத் தலையை அசைத்தார்கள்.

“நீங்கள் முடிஞ்சு என்று நினைச்சம்”

இப்படி எல்லாப் பக்கமும் இருந்து வந்த கேள்விகளுக்கும், நடந்தது என்ன என இரண்டாவது முறையாக விளக்கத் தொடங்கினேன். "ஓட்டினேன், ஓட்டினேன், ஓட்டிக்கொண்டே இருந்தேன், அதை எப்படிச் சுவாரசியமாகச் சொல்ல முடியும்?"

"உனக்கு இடையில் எங்கயோ பேய் பிடித்திருக்கு, அதால் உனக்கு சைக்கிள் மட்டும் தான் ஓட்டமுடியும், அதுகுப் பதில் கதை குறைந்திட்டுது" என்று சொல்லிச் சிரித்தார். "ஓம்.. வழக்கமா காதில் இரத்தம் வருமட்டும் விடாமல் motivational talk குடுப்பான் ஆனால் இந்தப் பேய் பிடிச்சதில் அதுவும் போயிட்டுது" என்றார் மற்றொருவர். இப்படியே கேலியும் சிரிப்புமாக மீண்டும் ஓடத் தொடங்கினோம்.

இதுதான் அதிகச் செங்குத்தான மலைகள் கொண்ட பந்தயத்தின் பிரிவு. மிகக்கடினம் எனத் தெரியும். எனது குழுவில் நான் தான் மலை ஏற அதிகம் சிரமப்படுவேன். அதனால் வழி நெடிகிள் வாயில் போட்டுக் கொள்ளலாம் என்று, அதிக இனிப்பு டழுடடலகளை என்னுடன் எடுத்துக்கொண்டேன். தொடங்கிய 30 நிமிடத்திலேயே சிரிப்பு குறைந்தது இன்னும் 15 நிமிடங்களில் மீதம் இருந்த கதையும் குறைந்தது.

மணி 11 இருக்கும் வானம் மேகம் ஏதும் இன்றி நீலத் திரை விரித்த மாதிரி இருந்தது. கண் முன்பாகப் பாதை உயர்ந்து கொண்டு சென்று அந்த நீலத் திரையை முட்டியது. குழுவினரின் பேச்சு என் காதில் விழுந்தது ஆனால் கவனம் முழுதும் எப்பிடியாவது அந்த நீலத் திரையை முந்தி போய் பிடித்திட வேண்டும் என்று தோன்றியது. இப்போதே வேகத்தை அதிகரித்தால் உடனே சோர்வடைந்து போய்விடுவேன். முதல் ஏற்றத்தில் ஆறுதலாய் போவோம். அந்தச் சரிவு என் திட்டங்களைப் பற்றி எந்த கவலையும் படவில்லை. கால்களில் அழுத்தம் ஏறத் தொடங்குகிறது. அது வலியல்ல, வலி தொடங்கப் போவதற்கான எச்சரிக்கை. முடிந்த அளவு அமர்ந்தே மிதிக்க முயன்றேன். ஆனால் அந்த ஏற்றதிடம் தோற்றுப்போனேன், என்னை எழுந்து நிற்கச்செய்தது. சுவாசம் ஆழமானது, சத்தம் சந்ததி இல்லாத அந்தச் சாலையில் என் மூச்சு, சத்தமாகக் கேட்டது. முதலில் பின்னணி இரைச்சலாக இருந்த மூச்சு இப்போது முன்னணியில் வந்துநின்றது.

நிமிர்ந்து சாலையைப் பார்த்தால் இன்னும் நீலத் திரை தூரமாகவே இருந்தது. சந்தேகம் நுழையத் தொடங்கியது. சீ... இந்தச் சந்தேகத்தை மட்டும் உள்ளே விடக்கூடாது. முழு ஏற்றத்தையும் ஓட்ட முடியாது. பகுதி பகுதியாகப் பிரித்து ஓட்டுவம்.

சாலையில் தெரிந்த விரிசல், நிழல் எனச் சிறிய இலக்குகள் ஒவ்வொன்றையும் மாறி மாறி கடந்தேன்.

சூரியன் நடு வானில் இருந்ததால் நீண்ட நேரம் நான் தேடும் அந்த நிழலைக் காணவில்லை. கால்கள் எரிகின்றன. அந்த ஆழமாக, பரவும் வெப்பம் கெண்டை கால்தசைகளில் குவிகிறது. மூச்சு, மற்ற எல்லாவற்றையும் மூழ்கடிக்கும் அளவுக்குச் சத்தமானது. நுரையீரல்கள் காற்றுக்காக ஏங்கின. பலர் என்னைக் கடந்து சென்றனர். துரத்திப் பிடிக்கவேண்டும் என்ற எந்த அகங்காரமும் பற்றிக்கொள்ளவில்லை. கண்கள் நிழலைத்தேட, கால்கள் பெட்டல்களில் அழுத்த, உள்ளிழுத்து வெளியேற்றும் காற்றின் சத்தம் இசையமைக்க என் உலகம் அதற்குள் சுருங்கியது. உயிரைத் தவிர வேறு ஏதும் என்னிடம் இல்லாத அளவுக்குக் கடந்த ஒரு மணி நேரமாக என்னிடமிருந்து எல்லாவற்றையும் உருவியது அந்த மலை. அந்தத் தருணத்தில் அவள் முகம் என் கண் முன் ஒருகணம் வந்து சென்றது.

நான் பெட்டல்களை மிதிப்பதை நிறுத்தினேன். ஆனாலும், சைக்கிள் முன்னோக்கிப் பாய்ந்தது. என்னிடமிருந்து எல்லாவற்றையும் உருவிய அந்த மலை,

திடீரென்று எதையோ திருப்பிக் கொடுத்தது. அந்த மலையே காதலியாக மாறி புவியீர்ப்பு விசையால் என்னை இழுத்தது. மென்மையாக அல்ல, வேகமாக. இன்னும் வேகமாக. சில நிமிடங்களுக்கு நான் சாலையுடன் போராடவில்லை. காற்று என் காதுகளைக் கடந்து சீறிப் பாய்ந்து, ஒரு தொடர் இரைச்சலாக மாறியது. சாலை ஓர மரங்கள் கண்முன் மங்கின. காய்ந்த புல்வெளிகள் பச்சை மற்றும் தங்க நிற நீரோடை போலக் கடந்து சென்றன. சைக்கிள் என் உடலின் ஒரு நீட்சியானது. கைப்பிடியில் ஒரு மென்மையான அழுத்தம். பார்வை வளைவின் வழியே பாதை திரும்பியது. நான் அதனுள் ஒன்றிப் போனேன். என்னைத் தொலைத்ததில் வந்த மகிழ்ச்சி. மணிக்கு 50 கிலோமீட்டர் வேகத்தில், இழந்த உறவுகள், தவறவிட்ட வாய்ப்புகள், கைவிடப்பட்ட இலட்சியங்கள், நிறைவேறாத கனவுகள் எதுவுமே ஒரு பொருட்டாகத் தெரியவில்லை. அந்தச்சாலை வளைவுகள் என்னைப் பற்றியிழுத்து வந்து பள்ளத்தாக்கில் விட்டது. மீண்டும் பூமிக்கு வந்தது போல இருந்தது. மீண்டும் சுவாசிக்கத் தொடங்கினேன், மிதிக்கவும்தான். அடுத்த ஏற்றம் தொலைவில் தெரிந்தது.

LAP 3

மலை ஏற்ற இறக்கங்களில் சிறு பிள்ளைகள் போல விளையாடிக் களைத்து, ஓய்வெடுத்து, மீண்டும் மிதிக்கத் தொடங்கினேன்.

யூக்கலிப்டஸ் மரங்களின் அடர்த்தி குறைந்தன. புதர் நிலம் மெதுவாக வழிவிட்டது. காய்ந்த மண்ணின் வாசனையைக் காற்றில் மிதந்து வந்த உப்பின் வாசனை மாற்றியது. கடல் தோன்றியது, அடிவானம் வரை பரந்து விரிந்திருந்தது. வானமும் கடலும் ஒரே நீல நிறத்தில் இருந்ததால் எது கடல் எது வானம் என்றே தெரியவில்லை. அதை இரசிப்பதற்காகவே சாலையின் ஓரத்தில் ஓட்டிக்கொண்டிருந்தேன். குனிந்து பார்த்தால் வெண் அலைகள் கருமையான பாறைகளின் மீது மடிந்து, பின்னர் நீண்ட நுரைகளாகக் கரைந்தன. மூச்சு முட்டியது.

சில கிலோமீட்டர்கள் கழித்து, இந்த அழகையும் இரசிப்பதை நிறுத்திவிடுவேன் என்று அப்போது தெரியாது. அழகு மறைந்துவிடவில்லை. நான் அதைக் கவனிப்பதை நிறுத்திவிட்டேன். கடல், பாறைகள் எல்லாம் இருந்த இடத்திலேயே இருந்தன. அலைகளும் நுரைகளும் அதேபோல வந்து மறைந்தன. ஆனால், நேரம் செல்லச்செல்ல, எந்த அழகும் பின்னணி இசையாகும். சைக்கிள் பெட்டல்களின் தாளமும், சுவாசத்தின் ஓசையும் முன்னணிக்கு வரும். கண்கள், முன்னால் இருந்த சக்கரத்தின் மீது திரும்பின. ஒரு காலத்தில் பார்த்துப் பார்த்துக் கட்டிய வீடு, கடினமாக உழைத்து அடைந்த பதவி, ஆசைப்பட்டுச் செய்துகொண்ட கல்யாணம் இதில் எதுவும் தன் அழகை இழக்கவில்லை. எனக்குத்தான் பழகிவிட்டன, அவ்வளவே.

சாலை சமதரையாக, கடலோரமாகத் தொடர்ந்தது. இனி வெல்ல ஏற்றங்களோ, சரணடைய இறக்கங்களோ இல்லை. அடிவானத்தில் மறையும் நீண்ட சாலைகள் மட்டுமே. உரையாடல்கள் சுருங்கின. சில நேரங்களில் பத்து நிமிடங்களுக்கு யாரும் பேச மாட்டார்கள், ஏனென்றால் பேச ஒன்றும் இல்லை. பெட்டல். பெட்டல். பெட்டல். இதைத் தவிர மூளையில் வேறேதும் இல்லை. ஏதோ ஒரு வெறுமை, மோசமாக இல்லை. அதேநேரம் பரபரப்பாகவும் இல்லை. வெறுமனே இருந்தது.

முதலில் seat பிரச்சனை அதைச் சரி செய்து விட்டதைப் பிடித்ததில் போய்விட்டு. பிறகு மலை ஏற்றம் உடலை வருத்த வந்த எரிவைத் தணிப்பதில் போய்விட்டு. அந்த வலிகளுக்குப் பெயர் வைக்கமுடிந்தது. இப்ப வலிக்கிறதற்கு எந்தப் பெயரும் வைக்கமுடியவில்லை. இருக்கிறதா இல்லையா என்றே விளங்காத வலிக்கு எப்படிப் பெயர் வைக்கமுடியும்? எந்த மாற்றமும் இல்லாத

உத்தியோகம், குடும்ப பராமரிப்பில் கரைந்து போகும் மனைவி, மெதுவாகக் காணாமல் போகும் நண்பர்கள், வயதாகும் பெற்றோர்கள், வளரும் பிள்ளைகள். கனவுகள் நிஜமாக மாற, அடையப் புதிய கனவுகள் இல்லாததால், வாழ்கை சுவாரசியத்தை இழக்கிறது. சலிப்புத் தட்டுகிறது.

வாழ்க்கையின் கஷ்டமான விஷயங்கள் நாம் தேர்ந்தெடுப்பவையாக இருப்பது அரிது. அவை எங்களைக் கேட்காமலேயே வந்து ஒட்டிக்கொள்ளும். அவை எவ்வளவு காலம் இருக்கும் என்றும் சொல்லாது, எவ்வளவு சகித்துக்கொண்டால் அதைக் கடந்து போகமுடியும் என்று கூடச் சொல்லாது. அதுவாக போகும் வரைக்கும். சைக்கிள் ஓட்ட இதனால் தான் பிடித்திருக்கிறது. எங்கே தொடங்கும், எங்கே முடியும், எங்கே எவ்வளவு கஷ்டப்படவேண்டும் என்றும் தெரியும். அதை நானே தேர்ந்தெடுக்கலாம். அது கஷ்டத்தை மறைத்துவிடவில்லை, பதிலாக அதற்கு எல்லைகளை வகுத்தது. வாழ்க்கையும் அப்படி இருந்திருக்கலாம்.

மலைகளைக் கடப்பதுதான் கடினமான பகுதியாக இருக்கும் என்று கற்பனை செய்திருந்தேன். அதற்காகத் தான் எங்கள் பயிற்சியும் இருந்தது. நீண்ட ஓட்டத்தின் இறுதியில்தான் தெரிந்தது, இதுதான் கடினமான பகுதி. பாதை தொடர்ந்து சென்றுகொண்டிருந்தது. ஒன்றும் சுவாரசியமாக நடக்கவில்லை. வெறும் வெறுமை மட்டுமே இருந்தது, அது மனதைச் சலிப்படையச் செய்தது. இவ்வளவு தூரம் நான் ஓட்டியதும் இல்லை, இந்த சலிப்பைச் சமாளிக்க எந்தப் பயிற்சியும் இல்லை.

இந்த யோசனையின் போக்கில் இலக்குக் கோடு கிட்டத்தட்ட முன்னறிவிப்பின்றித் தோன்றியது. பந்தயத்தை நிறைவு செய்தவர்கள் கைகளில் பானங்களுடன், களைப்பான புன்னகையுடன் கதைகளைப் பரிமாறிக்கொண்டு சுற்றி நின்றிருந்தனர். சில இளைஞர்கள் புல்வெளியில் முற்றிலும் களைத்துப்போய்ப் படுத்துக் கிடந்தனர். இருபது வருடங்களுக்கு முன்பு நான் இன்னும் சீக்கிரமாகவே இலக்கை அடைந்திருக்கலாம். ஐம்பது வயதில், இந்த இடத்தில் நின்றது வேகத்திற்கும் விடாமுயற்சிக்கும் உள்ள வித்தியாசத்தை நான் கற்றுக்கொண்டதால் என்ற கர்வம் ஒருகணம் வந்து போனது.

காலை முதல் எனக்கு முன்னாள் இருந்த மலைகள், நீண்ட நெடிய பாதை எல்லாம் பின்னால் நின்றன, அவளைத்தவிர.

தடுப்புகளுக்கு அப்பால் அமைதியாகக் காத்துக் கொண்டிருந்தாள். என்னை அறியாமலே புன்னகை முந்திக்கொண்டது.

அன்று அதுவரை ஒரே ஒரு முறை மட்டுமே அவள் முகம் என் நினைவுக்கு வந்தது. எளிதான சமதரைகளில் அல்ல. வேகமான இறக்கங்களிலும் அல்ல. செங்குத்தான ஏற்றத்தின் உச்சியில், அடுத்த மூச்சைத் தவிர வேறு எதைப் பற்றியும் சிந்திக்க இல்லாத நேரத்தில். ஏன்? அந்த மலை, என்னால் எதைச் சுமக்க முடியும் என்று சோதிக்கவில்லை. பதிலுக்கு என்னால் எதை விட்டுச் செல்ல முடியாது என்றுதான் சோதித்திருக்கிறது. நாள் முழுவதும் மலைகளைக் கடக்கத் தெரிந்த எனக்கு, இந்தத் தடுப்பைத் தாண்டுவதற்கான வழி எங்கிருக்கிறது என்று மட்டும் தெரியவில்லை.

# SiteVision SECURITY

*Your Safety, Our Priority*



## SECURITY SOLUTIONS

*YOU CAN TRUST*

- CCTV SYSTEMS
- ALARM SYSTEMS
- INTERCOM & ACCESS CONTROL
- 24/7 MONITORING

1300 108 555

31 Rusty Pl, Hallam VIC 3803

sitevisionsecurity.com.au

SCAN TO VISIT OUR WEBSITE

- LICENSED & INSURED
- 24/7 SUPPORT
- EXPERT TECHNICIANS
- QUALITY SERVICE

PROTECTING WHAT MATTERS MOST

# THE MANGO TREE

*Tantalizing your Taste Buds*

## We are Catering for Every Occasion

BIRTHDAY PARTIES, ANNIVERSARIES
WEDDINGS, PUBERTY CEREMONIES
& SPECIAL OCCASIONS





Special Rates available for
"ARANGETRAM" FUNCTIONS
WE CAN MATCH ANY GENUINE QUOTE! !

CALL US

(03) 9791 1111 - 0403 058 808

12 CLOW STREET, DANDENONG